ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஏப்ரல் - 2013

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி



இயேசுவின் சபைக்குப் பணிபுரிய

இயேசுசபை இருந்து வந்த எளிமையே!

உயிர்த்தனன் இயேசு உயிர்த்திட உலகு

30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**ஏப்ரல் ~ 2013**


மலர் - 45 இதழ் - 03

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்கள்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  திரு/மட். மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் - 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே ....




அன்புடன் உங்களோடு .............. 01
இதோ நான் அனைத்தையும் ....... 02
நமது புதிய பாப்பரசர் .............. 03
புது வாழ்வு .............................. 05
இயேசுவின் உயிர்ப்பு ................ 06
நமது பண்பாட்டுச் ..................... 09
கடுகுக் கதை ........................... 10
ஜோர்ஜ் மரியோ ........................ 11
அன்பின் அரசி .......................... 14
தொண்டனின் சில ..................... 16
மாணவர் பக்கம் ....................... 19
இலக்கிய மஞ்சரி ..................... 20
ஒரு மணித்தியாலத்தின் ............ 22
நம்பிக்கை ஒரு சவால் .............. 25
பாப்பரசரைப் பற்றி .................. 27
வாழ்க்கைக்கு ........................... 28
புனிதர்களை அறிவோம் ............ 29
விவிலியம் கற்போம் ................ 31
அறிவை வளர்ப்போம் .............. 32


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபால் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு....

"கருகிவிட்டது என்று கல்லறைக்குள் வைக்கப்பட்ட இயேசு என்ற வித்தானது, வைத்தவர்கள் மூச்சுவாங்குவதற்குள் முளைத்துவிட்டது"

உலகம் கொண்டாடுகின்ற திருவிழாக்களிலெல்லாம் முதன்மையான, தலைசிறந்த விழா கிறிஸ்து உயிர்த்த பெருவிழா. ஏனெனில், அது கிறிஸ்தவ விசுவாசத்தின் திருவிழா. கிறிஸ்தவ வாழ்வுக்கு அடித்தளமாக இருந்து அர்த்தம் தருவது கிறிஸ்துவின் உயிர்ப்பாகும். "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாய் இருக்கும்" (1 கொரி 15:14).

காலம் மாறிக்கொண்டே இருக்கின்றது. மாற்றம் என்பது எவ்வளவு உண்மையானது என்பதை, நமது நாளாந்த வாழ்க்கை அனுபவங்களும், நாட்டிலும் உலக அரங்கிலும் இடம்பெறும் நிகழ்வுகளும் கூறிக்கொண்டே இருக்கின்றன. ஆனாலும், மாறும் உலகிலும் மாறாதது உண்மை! அந்த உண்மையின் வடிவம் இயேசுக்கிறிஸ்து. கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா இந்த உண்மையை நினைவுகூர்ந்திட அழைக்கின்றது.

மீட்பின் வரலாற்றில் மணிமகுடம் கிறிஸ்துவின் உயிர்ப்பு. அதுவே நமது விசுவாச வாழ்வின் அடித்தளமும் கூட. அதனால்தான் ஆண்டு முழுவதும் நாம் கொண்டாடுகின்ற திருவழிபாட்டின் மையமாக அது அமைந்திருக்கின்றது. சாவின் சக்திகள் இறைவன் முன் பலமற்றவை. ஏனெனில் சாவுக்கே சாவுமணி அடித்தவர் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து. எனவே, ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு இந்த உண்மையை இன்றும் பறைசாற்றிக்கொண்டே இருக்கின்றது.

நமது கிறிஸ்தவ விசுவாசம் பொருள் உள்ளதாய், உயிருள்ளதாய் இருப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பில்தான். பிற சமயங்களிலிருந்து வேறுபடுத்தித் நமது தனித்தன்மையை வெளிப்படுத்துவது கிறிஸ்துவின் உயிர்ப்புதான். ஆகவேதான், இயேசு மானிடரின் முதற்கனியாய் உயிர்த்தெழுந்தார். (உரோமை 8:35) "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவர் யார்? வேதனையோ, நெருக்கடியோ, ஆடையின்மையோ, இடர்களோ எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்...?" நமது வாழ்வில் அன்றாட நிகழ்வுகளில் வரும் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், சோதனைகள், சுமைகள் இவற்றை நிறைவாக ஏற்றுக்கொண்டு, இயேசுவோடு சேர்ந்து நம்பிக்கையோடும், இலட்சியத்தோடும் போராடும் போது இயேசுவின் உயிர்ப்பில் நாம் பங்கு கொள்கின்றோம்.

பாவத்திலிருந்து புனித வாழ்வுக்கும், அடிமையிலிருந்து கடவுளின் மக்கள் என்ற உன்னத நிலைக்கும், இருளிலிருந்து ஒளியின் பாதைக்கும், வேற்றுமையிலிருந்து ஒற்றுமைக்கும், வேறுபட்ட, மாறுபட்ட கருத்துகளிலிருந்து ஒன்றுபட்ட கருத்துக்கும் நாம் கடந்து செல்வதை இயேசுவின் உயிர்ப்பு இன்று நமக்கு நினைவூட்டுகின்றது.

இயேசுவின் உயிர்ப்பு அனைவருக்கும் அமைதியையும், சமாதானத்தையும் கொண்டுவர வேண்டுமென்று ஆசிப்பதோடு, புதுவருடத்தைக் கொண்டாடுகின்ற இந்து மக்களையும் இந்தவேளை யிலே நினைவுகூருகின்றேன். நம்பிக்கையும் – அவநம்பிக்கையும், சாதனைகளும் – சோதனைகளும், வெற்றியும் – தோல்வியும், களைப்பும் – சோர்வும், கற்பனைகளும் – கனவுகளும் இவைகளுக்கு மத்தியில் புதியதொரு ஆண்டில் காலடி பதிக்கும் மக்கள் புதிய ஆண்டிலே ஒரு புது உதயத்திலே, கடந்தகாலச் சுவடுகளில் நடந்தது என்ன...? எப்படி வென்றோம்...? ஏன் தோல்வியைத் தழுவினோம்....? எது சரி...? எது தவறு...? எனப் புரட்டிப் பார்த்து புதிய ஆண்டில் புரிந்துகொள்ளவும், நடக்க இருக்கும் வழித்தடங்களை சரியான முறையில் தெரிந்துகொள்ளவும், நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஒற்றுமையுடனும், நீதியுடனும் சமாதானத்துடனும் வாழவும் இறைவன் என்றும் அருள்புரிவாராக!

**அனைவருக்கும் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா வாழ்த்துகள்!**

- *ஆசிரியர்* -

இறைவாக்கு

"ஞானஸ்தானத்தில் அவரோடு புதைக்கப்பட்டிருக்கிறீர்கள் இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல்மீது கொண்ட விசுவாசத்தால் அவரோடு நீங்களும் உயிர்த்தெழுந்தீர்கள்"

• (கொலோ 2:12)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்

(தி.வெ 21:5)

ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா ஆசிச் செய்தி



நம்பிக்கை ஆண்டிலே, நம் ஆண்டவரின் உயிர்ப்பு விழாவை அகமகிழ்வோடு கொண்டாட, அல்லேலூயா பாடி ஆனந்தம் கொள்ள அழைப்பு விடுக்கின்றேன். ஏனெனில், கிறிஸ்து பிறப்பு விழாவில் அடையும் மகிழ்ச்சியை விட உயிர்ப்பு விழா இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஏனெனில், எமது நம்பிக்கையின் அடிப்படையும் நற்செய்தியின் நம்பகத் தன்மையையும் தன்னகத்தே கொண்ட விழாவாக உயிர்ப்பு விழா விளங்குகின்றது. "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1 கொரி 15:14) என்கிறார் புனித பவுல்.

உயிர்ப்புக்கு மறு பெயர் புது வாழ்வு. உயிர்த்த கிறிஸ்துவின் ஆவியினால் கிடைக்கும் பெருவாழ்வு, ஆவிக்குரிய வாழ்வு. திருமுழுக்கில் நாம் பெறும் இப்புதுவாழ்வு, உறுதிப்பூசுதலினால் உறுதிப்படுத்தப்பட்டு, திருவிருந்தினால் வளர்ச்சி பெற்று தொடர்ச்சியான உள மாற்றத்தினால் புதுப்பொலிவு பெறுகிறது.

இறைவனை மனிதன் புறக்கணித்து வாழ்ந்தபோது, மனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கும் சாவு, சாவு பற்றிய அச்சம் போன்றவற்றுக்கு அடிமையாக வாழ்ந்தபோது புதிய படைப்புபற்றி இறைவன் முன்னறிவித்தார். "இதோ! புதிய விண்ணுலகையும், புதிய மண்ணுலகையும் படைக்கிறேன். இனி அங்கே அழுகையும், கூக்குரலும் ஒருபோதும் கேட்கப்படமாட்டா...." (எசா 65: 17, 19) தந்தையாகிய இறைவன் வாக்களித்ததை தம் ஒரே மகனின் இறப்பு-உயிர்ப்பு மூலம் நிறைவேற்றினார்.

புனித யோவானின் கருத்துப்படி, உயிர்ப்பு என்பது இருளின்மேல் ஒளி கொண்ட வெற்றி. பகையின்மேல் அன்பு கொண்ட வெற்றி. சாவின்மேல் வாழ்வு கொண்ட வெற்றி.

அவர் தம் இறப்பு உயிர்ப்பினால் வாழ்வின் எதிர்மறையான எதிர்ப்பண்பு வாய்ந்த, எதிர் இயல்புடைய அனைத்தையும் அழித்து ஒழித்து விட்டார்; செல்லாததாக்கி விட்டார்; பயனற்றதாக்கிவிட்டார். வாழுமுன் வரலாறு வகுத்தவரை கல்லறைக்குள் அடக்கிவிட எண்ணினர். ஆனால், அக்கல்லறையே புதுவாழ்வு தரும் கருவறையாக மாறியது. இவ்விதமாக ஆக்கமுறையான, மட்டற்ற தன்னம்பிக்கையுடைய, மாறாத தனிநிலையான வல்லமை வெளிப்பட்டது. அதுவே, உயிர்ப்பின் வல்லமை. அத்தகைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிய பவுல் அடிகளார் விரும்பினார். (காண். பிலி 3:10-11)

- 18ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நமது புதிய பாப்பரசர் - ஏழைகளின் தோழன்

## - பிரான்சிஸ் -

முதலாம் பிரான்சிஸ் பாப்பரசர், முன்னைநாள் கர்தினால் ஜோர்ஜ் மரியோ பெர்க்கொக்லியோ சே.ச., முன்னைநாள் ஆர்ஜென்ரினா நாட்டு புவனஸ் அயர்ஸ் அதிமேற்றிராணியார், கீழைத்தேய ரீதியான ஆர்ஜென்ரினா மக்களில் சாதாரணமானவர். 1936 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17ந் திகதி புவனஸ் அயர்சில் பிறந்தார். இரசாயன தொழில்நுட்பவியலாளனாகப் படித்துப் பட்டம் பெற்றாலும் கூட குருவாக வர விரும்பி வில்லா டிவோட்டோ (*Vill Devoto*) எனுமிடத்தில் குருமடத்தில் இணைந்து கொண்டார்.

1958 மார்ச் மாதம் 11ந் திகதி சிலி நாட்டில் இயேசு சபை இளங்குருமடத்திற்கு அனுப்பப்பட்டு மானுடவியல் தொடர்பான கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார். 1963 இல், புவனஸ் அயர்ஸ் திரும்பி, புனித மிஜுவல் எனுமிடத்தில் உள்ள புனித வளனார் சிரேஷ்ட குருமடத்தில் தத்துவவியலில் பட்டம் பெற்றார்.

1964ற்கும் 1965ற்குமிடையில் சன்டா பெ (*Santa Fe*) இல் இமாகுலேட்டா கல்லூரியில் இலக்கியம், உளவியல் துறைகளில் கற்பித்தார். பின்னர் 1966 இல் புவனஸ் அயர்சில், எல் சல்வடோர் பல்கலைக் கழகத்தில் அதே பாடங்களைக் கற்பித்தார்.

1967 முதல் 1970 வரை சன் மிஜுவலில் புனித வளனார் சிரேஷ்ட குருமடத்தில் இறையியல் கல்வியை மேற்கொண்டு பட்டம் பெற்றுக்கொண்டார். 1969ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ந் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1970 இலிருந்து 1973 வரை ஸ்பெயின் தேசத்தில் அல்கலா ஹெனாஸ்ரஸ் (*Alcala Henasres*) எனுமிடத்தில் தனது மூன்றாவது கட்ட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தார். இதையடுத்து 1973 ஏப்ரல் 22இல் தனது கடைசி வார்த்தைப் பாட்டைக் கொடுத்தார்.

**- ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



1972 தொடக்கம் 1973 வரையிலும் சன் மிஜுகலில் உள்ள வில்லா வரிலாரி (*Villa Varilari*) இளங்குருமடத்தில் இளம்நிலை மாணவர்களின் பொறுப்பாளராகவிருந்தார். அங்கு இறையியலையும் கற்பித்தார். 1973 ஜுலை 31 ஆர்ஜென்ரினாவின் சேசு சபை மேலாளராகத் (*Provincial*) தெரிவு செய்யப் பட்டு சுமார் ஆறு வருட காலம் இப் பதவியை அவர் அலங்கரித்தார்.

1980 முதல் 1986 வரை சன் மிஜுகலில் தத்துவவியல் மற்றும் இறையி யல் வளாகத்தின் அதிபராகவும் சன் மிஜுகல் மறைமாவட்டத்தின் பற்றியார்க்கா, புனித வளனார் பங்கின் பங்குத் தந்தையா கவும் பணியாற்றினார். 1986 இல் ஜெர்மனி சென்று தனது முனைவர் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தார். அவரது மேலாளர்கள் அவரை அதற்குப் பின் எல் சல்வடோர் பல்கலைக் கழகத்திற்கும் பின்னர் கொர்டோபா (*Cordoba*) வுக்கும் அனுப்பி வைத்தனர். அங்கு அவர் ஒப்புரவு அருட்பணியாளரா கவும் ஆன்மீக இயக்குனராகவும் செயற் பட்டார்.

1992 மே மாதம் 20 இல் அன்றைய பாப்பிறை இரண்டாம் அருள் சின்னப்பர் அவரை ஒகா (*Auca*) பகுதியின் மனிதா பிமான ஆயராகவும், புவனஸ் அயர்சின் இணை ஆயராகவும் நியமித்தார். அதற்கான ஆயர்த்துவ அபிஷேகத்தை அதே ஆண்டு ஜுன் மாதம் 27ந் திகதி புவனஸ் அயர்ஸ்

- 8ம் பக். பார்...

## "பிறரன்புப் பணிகள் இல்லாத நம்பிக்கை கனிகளற்ற மரத்திற்குச் சமம்"

- திருத்தந்தை -

**பி**றரன்பின் மிகச் சிறந்த பணி நற்செய்தி அறிவிப்புப் பணி. ஏனெனில், ஒவ்வொன்றும் அன்பிலிருந்து தொடங்கி அன்பை நோக்கியே செல்கின்றது. கடவுளின் கைமாறு கருதாத அன்பு, நம் அனைவருக்கும் நற்செய்தி அறிவிப்பு வழியாக தெரிவிக்கப்படுகின்றது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

தவக்காலத்திற்கென வெளியிடப்பட்ட திருத்தந்தையின் செய்தி, நம்பிக்கைக்கும் பிறரன்புக்கும் இடையே இருக்கும் பிரிக்கமுடியாத நெருங்கிய உறவு குறித்து விளக்குகிறது.

நம்பிக்கை ஒரு கொடை. அது கடவுளின் அன்புக்கு நமது பதில். தந்தையின் விருப்பத்துக்கு முழுவதும் பணிந்து, மனுஉரு எடுத்து, சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்ளவும் நம்பிக்கை உதவுகின்றது எனவும் திருத்தந்தையின் செய்தி கூறுகின்றது. கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் அன்பில் நாம் நுழைவதற்கு நம்பிக்கை உதவுகிறது.

தமது விண்ணகத் தந்தைக்கும், தமது சகோதர சகோதரிகளுக்கும் தன்னையே வழங்கும் அளவுக்குப் பேரன்பு கொண்ட இயேசுவில் இணைவதற்கும் பிறரன்பு உதவுகிறது என்று திருத்தந்தையின் செய்தி கூறுகிறது. பிறரன்பில் நம்பிக்கை வைப்பது பிறரன்புக்கு நம்மை அழைக்கிறது என்ற தலைப்பில், நம்பிக்கை, கடவுளின் அன்புக்கான பதில், பிறரன்பு நம்பிக்கையில் வாழ்வு, பிறரன்புக்கும், நம்பிக்கைக்கும் இடையே இருக்கும் பிரிக்க முடியாத உறவு, பிறரன்பு, நம்பிக்கை ஆகியவற்றுக்கான முன்னுரிமை ஆகிய நான்கு பகுதிகளில் திருத்தந்தையின் இச்செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புது வாழ்வு!



நிர்மலா சுரேஷ்

வெள்ளிக்கிழமை அடக்கமானவர்
ஞாயிற்றுக்கிழமை தொடக்கமானார்!
வைகறையில் கல்லறையில்
பொன்னிற உருவங்கள் வந்து
புரட்டின குகைக் கல்லை!
காவல் வீரர் கவிழ்ந்து விழுந்தார்!

மணப்பொருள் சடங்கு செய்ய வந்த
மங்கை மதலேன் இயேசுவின்
உடலைக் காணாமல் தன்
உயிரே காணாமல் போனதுபோல்
உணர்ந்தாள்! துயரில் உழன்றாள்!


தோழர் இராயப்பர், அருளப்பருக்கும்
தெரிவித்தாள்! தேடியும் பயனில்லை!
தூசுகூட இன்றி சமாதி
இன்னும் புதிதாய்ப் பொலிந்தது!

தேம்பிய மதலேன்
விடியல் இருட்டில்
தோட்டக்காரன்போல் தோன்றிய
வெள்ளை உடை உருவத்திடம்
விசாரித்தாள்!

"நான்தான் இயேசு"
என்றது குரல்!
அடையாளம் கண்டவள்
அதிர்ந்தாள்! ரோஜா இதழென
உதிர்ந்தாள் அவர் காலடியில்!

"செய்தியைச் சொல் தோழருக்கு"
என்றார் சேயோன்!
புறாவாய்ப் பறந்தாள்!
தானே மீண்டும் பிறந்தாள்!

# உயிர்த்தெழுந்தார்!



– கவிஞர் கண்ணதாசன் –

வெள்ளியன்று பிற்பகலில் மரித்த இயேசு
வேதமுற மாலையிலே அடக்க மானார்
கள்ளர்களும் ஒய்வெடுப்பார் சனியில் அன்று
கட்டாய விடுறைநாள் யூத ருக்கு
பிள்ளைகளும் பெரியோரும் மாதர் தாமும்
பேதலித்துச் சனிமுழுதும் ஒய்ந்தி ருந்தார்
வெள்ளிமுளைத் தேயெழுந்து ஞாயி றன்று
விழகின்ற போதினிலே குறித்தெ ழுந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இயேசுவின் உயிர்ப்பு

இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றி புனித யோவான் 20ம் அதிகாரத்தில் அதாவது நூலின் கடைசிக்கு முந்திய அதிகாரத்தில் எழுதுகிறார். அதே செய்தியை மத்தேயு தமது நூலின் 28வது அதிகாரத்தில் கூறுகிறார்: அது அவரது நூலின் கடைசி அதிகாரமாகும். மாற்கு என்ற ஆசிரியர், இயேசுவின் வரலாற்றை எழுதியவர், அதாவது இயேசுவின் வரலாற்றில் 16வது அதிகாரத்தில் இயேசுவினுடைய உயிர்த் தெழுதலைப் பற்றிக் கூறுகிறார். இதுவும் மாற்குவின் கடைசி அதிகாரமாகும்.

இயேசுவின் வரலாற்றை அல்லது மனித அவதாரம் எடுத்து இயேசு இவ்வுலகுக்குக் கொணர்ந்த நற்செய்தியை அவரது நேரடிச் சீடர் இருவரும் அவரது வழி வந்த சீடர் இருவரும் எழுதுகின்றனர். மத்தேயுவும் யோவானும் இயேசுவின் சீடர்கள்; மாற்குவும் லூக்காவும் இயேசுவின் சீடர்களின் வழி வந்தவர்கள். நால்வரும் இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு, உயிர்ப்பின் பின் இயேசு இவ்வுலகில் சஞ்சரித்த நாற்பது நாட்கள் அவர் தரிசித்துப் போதித்தவைகளை எழுதுகின்றனர்.

சீடனான மத்தேயுவும் லூக்காவும் மட்டுமே இயேசுவின் பிறப்பை ஒட்டிய செய்தியைத் தருகின்றனர்.

யோவானின் நற்செய்தி தத்துவ பூர்வமானது. அந்த நற்செய்தி பரிசுத்த ஆவிக்குக் கூடுதல் முக்கியத்துவம் தருகிறது. சாதாரண வாசிப்பு நற்செய்தியின் ஆழத்தைத் தராது. யோவான் எழுதியதாகச் சொல்லப்படும் 'திருவெளிப்பாடு' என்ற விவிலிய நூலின் கடைசி நூலும் மறை பொருள், மறை வரலாறு கொண்ட நூலாகும்.

இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி புனித யோவான் கூறுகின்ற செய்தியும், ஏனையோர் கூறுகின்ற செய்திக்குமிடையே வேறுபாடு உண்டு. யோவான் இயேசுவின் சிலுவை மரணத்தை சிலுவையடியில் நேரில் பார்த்தவர். மேலும் இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் அங்கு அவரது கல்லறையில் அவரது உடல் இருக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அருட்திரு கலாநிதி S.A.I. மத்தியூ

மையைக் கண்டு மகதலே மரியா, பேதுரு என்ற தலைமைச் சீடனுக்கும், யோவானுக்கும் அறிவித்தாள். வெற்றுக் கல்லறைக்கு ஓடோடிச் சென்று அங்கு இயேசுவின் உடல் இல்லாதிருப்பதையும் கண்டாள். முதலில் இயேசு உயிர்த்தெழுந்த சாட்சியத்தை அறிவித்தவள் மகதலா மரியா. அடுத்து இயேசுவின் உயிர்த்தெழுந்த சாட்சியத்தை அறிவித்தவர் யோவான். இதனால் யோவானின் சாட்சியம் அதாவது இயேசு உயிர்த்தெழுந்த சாட்சியம் வலுவானது.



உயிர்த்தெழுந்த இயேசு முதலில் காட்சி கொடுத்தது மகதலா மரியாவுக்குத்தான். உடனே அந்தக் காட்சி நடைபெறுகிறது. இயேசுவின் உடலைக் காணாத மகதலா மரியா அழுதாள். கல்லறைக்கு வெளியே இயேசு நிற்பதைக் கண்டாள். ஆனால், அவளுக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. 'ஏனம்மா அழுகிறாய்' யாரையம்மா தேடுகிறாய்? இது இயேசுவின் முதலாவது வார்த்தை. அடுத்து இயேசுவின் 'மரியா' என்ற வார்த்தை மூலம் - மரியா இயேசுவை அடையாளம் கண்டு கொண்டாள். மரியா உயிர்த்த இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டாள். சீடர்களிடம் சென்று, "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்ற செய்தியையும் கூறினாள்.

அதன்பின் உயிர்த்த இயேசு கூறும் செய்தி அமைதி, சாந்தி. பூட்டப்பட்டிருந்த கதவுக்குள் கதவின் தாழ்களைத் திறக்காமல் நுழையும் சக்தி அவருக்கு இருந்தது. சீடர்களிடையே வந்து சீடர்களுக்குக் கொடுக்கிற முதல் செய்தி, "உங்களுக்கு அமைதி உண்டாகுக" இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்பதில் முன்னர் நம்பிக்கையற்றிருந்த தோமஸ் அல்லது டிடிமஸ் என்ற சீடனிடம் "இதோ! என் கைகள், இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு, ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" எனும் வாக்கியம் வரலாற்று வாக்கியம். "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" யோவான் நற்செய்தி 21ம் அதிகாரம் 21ம் வசனத்திலும் அதே அதிகாரம் 26வது வசனத்திலும் இயேசு தாம் உயிர்த்த நற்செய்தியின் பலனை சீடர்களுக்கு முதல் அளிக்கின்றார். அந்த நற்செய்தி - "உங்களுக்கு அமைதி". இது இயேசுவின் அதியுயர் நற்செய்தி. நற்செய்திகளுக்குள் நனி சிறந்த செய்தி. தாம் உயிர்த்தெழுந்த நற்செய்தியை விட உயர்ந்த நற்செய்தி.

இயேசுவின் உயிர்ப்பு துன்பத்தின் வழியாக வந்த உயிர்ப்பு. அது அமைதியை அளிக்க வேண்டும். மனிதனுக்குத் தேவையானது அமைதி.

ஆன்மீக அமைதி. அதுவே மோட்சம்: அதுவே ஆனந்தம். "சத் சித் ஆனந்தம்" இயேசுவின் அறிவு. அதாவது இறைவனே அந்த அறிவு. அதன் மூலமே ஆனந்தம்.

- மறு பக். பார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- 4ம் பக். தொடர் ...

பேராலயத்தில் நடந்த திருச்சடங்கின் போது கர்தினால் அன்ரோனியோ குவாரசினோ, பாப்பரசரின் பிரதிநிதி உபால்டோ கலாப்ரேசி மற்றும் எமிலியோ ஒக்னேனோவிச் ஆயர் ஆகிய மூவரும் நிறைவேற்றி வைத்தார்கள்.

1997 ஜுன் 03ந் திகதியன்று புவனஸ் அயர்சின் உடன் பேராயராக நியமிக்கப்பட்ட அவர், கர்தினால் அன்ரோனியோ குவாரசினோ அவர்களது இடத்திற்கு 1998 பெப்ரவரி 28ம் திகதி வந்தார். 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற ஆயர் பேரவையின் 10ஆவது சாதாரண பொது அமர்வுக்கான உதவி தகவல் நாயகமாக இருந்தார். ஆர்ஜென்ரினாவின் ஆயர் பேரவையின் தலைவராக 2005 நவம்பர் மாதம் 08 முதல் 2011 நவம்பர் 08 வரை கடைமையாற்றினார்.





"காலம் எப்படிக் கெட்டுப்போச்சு பாத்தியா...?"
"என்ன சொல்றீங்க...?"
"நாங்க படிச்ச காலத்தில ஆறாம் வகுப்புக்குப் போனபிறகுதான் பேனாவால எழுத விட்டாங்க. இப்ப அரிவரிப் பிள்ளையே பேனா கேட்குது...!"

- மணி -

2001 பெப்ரவரி மாதம் 21ஆம் நாள் முத்திப்பேறு பெற்ற இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை ரொபர்ட் பெலார்மின் என்ற புனிதரின் பெயருடன் கர்தினாலாக அறிவித்து உருவாக்கினார்.

அவர் பின்வரும் திருச்சபை அமைப்புகளில் உறுப்பினராகவும் செயற்பட்டார்: குருக்களுக்கான தெய்வீக வழிபாடு மற்றும் நற்கருணை ஒழுக்காற்று சபை, அபிஷேக வாழ்வுக்கான நிறுவனம், அப்போஸ்தல வாழ்வுக்கான சபைகள், குடும்பங்களுக்கான பாப்பரசரின் கவுன்சில், மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான பாப்பரசரின் ஆணைக்குழு.

## - இயேசுவின் உயிர்ப்பு ....

நானே உண்மையும் (சத்தியமும்) நானே வழியும். துன்பத்தின் ஊடாக நுழையும் வழி. சித் அது இறைவனை அறிந்து கொள்ளும் மார்க்கம். அதுவே சன்மார்க்கம். அதுவே பரமானந்தம்.

ஆகவே, இயேசு சொன்னார்; போதிக்கும் போதெல்லாம் சொன்னார்; அறிவு பெற்றோருக்கெல்லாம் சொன்னார்.

நானே உண்மையும் நானே வழியும் நானே வாழ்வும் - ஆனந்தம். Jesus said; *"I am the way the truth and the life"*. (சத் சித் ஆனந்தம்) இயேசு பகவான் தான் போதித்தபோதெல்லாம் தன்னைப் பற்றி கூறி வந்தவை. இதுவே இயேசுவின் உயிர்ப்பு. அப்போதே ஆன்மா சாந்தி பெறுகிறது. நாமும் சாந்தி சாந்தி சாந்தி என மூவொரு கடவுளுக்குச் சாற்றுவோம் துதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நமது பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாக்க தமிழ் விழாக்கள் தேவை

## கொழும்பு கம்பன் கழக விழாவில் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார்




பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகின்றார்

நமது மொழி, கலை, இலக்கிய,பண்பாட்டுச் செல்வங்களை நாம் பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும், இவற்றை நாம் அடுத்த தலைமுறைக்குப் பக்குவமாகக் கையளிக்க வேண்டும். அதற்கு கம்பன் விழா போன்ற தமிழ் விழாக்கள் நமக்குத் தேவை என மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார். கடந்த மார்ச் மாதம் 25ம் திகதி திங்கட் கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷனில் இடம்பெற்ற நான்கு நாள் கம்பன் விழாவின் இறுதிநாள் அமர்வில் கலந்துகொண்டு தொடக்கவுரை ஆற்றும்போதே அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெப்ரவரி மாதம் 22 – 25ஆம் திகதி வரையிலான நான்கு நாட்கள் நடைபெற்ற இவ்விழாவின் இறுதி நாள் அரங்கான குறள் அரங்கில் தொடக்கவுரையாற்றிய அடிகளார் அங்கு தொடர்ந்து கூறியதாவது, "உயிரை இழந்தோம் உரிமையை இழந்தோம் உணர்வை இழக்கலாமா?" நாம் எல்லாவற்றையும் இழந்தாலும் நாம் இழக்க முடியாத செல்வங்கள் பல இன்னும் நம்மிடம் உள்ளன. அதுதான் நம்முடைய மொழி, அதுதான் நம்முடைய இலக்கியங்கள், அதுதான் நம்முடைய கலைகள், அதுதான் நம்முடைய பண்பாடுகள்.

தலைநகரிலே தனித்துவம் மிக்க தமிழ் அமைப்பாக, தலைநிமிர்ந்து நிற்பது கொழும்பு கம்பன் கழகம். இது கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்கிறது. கொழும்பு கம்பன் கழகம் எடுக்கும் இந்தக் கம்பன் விழா இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை. இதுபோன்ற விழாக்கள் மூலமாகத்தான் நாம் தமிழின் சிறப்பை உணர முடியும். தமிழராகிய நாம் நமது தனிப்பெருமை எத்தகையது என்பதைச் சிந்திக்க முடியும். இந்த விழா நம்மை நாமே திரும்பிப் பார்க்கின்ற விழா. நமது அருமை பெருமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து மகிழுகின்ற விழா.

உலக வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தால் ஓர் உண்மை நமக்குத் தெளிவாகும். அதாவது ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால் எதிரிகள் முதலில் அந்த இனத்தின் மொழியை அழித்திருக்கின்றார்கள். மொழி அழிந்தால் ஓர் இனம் தானாகவே அழிந்துவிடும்.



அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தொடக்கவுரை ஆற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## கடுகுக் கதை (48)

# பதிவுக் கட்டணம்

— பற்றி —

அன்ரன் தன் அலுவலகப் பணியாளன் ஜெயராமை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"என்னடாப்பா! இன்று கலியாணப் பதிவெண்டு சொன்னனீ... வேலைக்கு வந்திருக்கிறாய்...!

ஜெயராம் அலுவலகத்தில் சிற்றூழியனாகப் பணியாற்றுகின்றான். அமையப்பதவிதான். அவன் ஒரு பெண்ணை விரும்பியிருக்கிறான். இரு பகுதியும் ஏழ்மைதான். அவனுக்கு குடும்பப் பொறுப்புகளும் ஏராளம். அன்ரன் அவனுக்கு எவ்வளவோ புத்தி சொல்லியும் அது எடுபடவில்லை. 'காதலுக்கு கண் மட்டுமில்லை, காதுமில்லை..." என்று அன்ரன் எண்ணிக்கொள்வார். இன்று இரகசியமாய்ப் பதிவுத் திருமணம் என்று அன்ரனுக்கு மட்டும் ஜெயராம் சொல்லியிருந்தான். ஆனால், வேலைக்கு வந்திருந்தான்.

"ஐயா ......., இண்டைக்கு பதிவு என்றுதான் இருந்தது. ஆனா, பதிவுக் கட்டணம் அஞ்சாயிரமாய் ஆக்கிப்போட்டாங்களாம்.... காசு புரட்ட ஏலாமப் போச்சி...."

"மடையா .... மடையா.... ஐயாயிரம் புரட்ட ஏலாம இருக்கிற நீ எப்பிடியடா குடும்பம் நடத்தப்போறா... யோசிச்சு நட .... வீட்டப் பத்தியும் யோசி..... வேலய பேமனன்ற் ஆக்கு .... பிறகு கல்யாணம் செய்....."

"ஓம் ஐயா .... நீங்க சொல்றது சரிதான். இல்லாட்டி இந்த சித்திரவரிசம் எங்கட வீட்டில சாவீடு போல இருந்திருக்கும்... பதிவுக் காச கூட்டினவனுக்குத்தான் நன்றி சொல்லணும்...."

"எவனெவனுக்கு நன்றி சொல்ற என்ற விவஸ்தையே இவனுக்குக் கிடையாது. இதக் கேள்விப்பட்டானுகள் எண்டா இன்னும் என்னென்னத்திற்கு வில கூட்டுவானுகளோ தெரியா....' என்று எண்ணியபடி அன்ரன் தலையில் அடித்துக்கொண்டார்... ■




நிகழ்வில் பங்குபற்றியோர்

மொழி என்பது ஆன்மா பயணிக்கும் பாதை. ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்குத் தன் பண்பாட்டை எடுத்துச் செல்லும் வழி. தமிழர்களாகிய நம்மைப் பொறுத்தவரை தமிழ் மொழி என்பது நமது வெறும் 'வழி' மட்டுமல்ல, அதுதான் நமது 'விழி.' ஏனென்றால் இரண்டாயிரம் ஆண்டு கால தமிழின் எழுச்சி - வீழ்ச்சி, வெளிச்சம் - இருட்டு, மேடு - பள்ளம் இவற்றை உற்றுப் பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். தமிழனின் மொழிக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித்தளங்கள் ஆட்டம் கண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜோர்ஜ் மரியோ பெர்கொக்லியோ

## இரயில்வே தொழிலாளியின் மகனிலிருந்து பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் வரை


ஒரு சாதாரண புகையிரத தொழிலாளியின் மகன் என்கின்ற நிலையிலிருந்து முன்னர் அதி மேற்றிராணியாராக, அடுத்து கர்தினாலாக இப்போது உலகெங்கும் பரந்துள்ள 1.2 பில்லியன் கத்தோலிக்க மக்களின் தலைவனாக ஜோர்ஜ் மரியோ பெர்கொக்லியோவுடைய உயர்வானது சரித்திரம் படைத்த மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் - முதலாவது இலத்தீன் அமெரிக்க பாப்பரசர், முதலாவது இயேசு சபை பாப்பரசர், அத்துடன் முதலாவது பிரான்சிஸ்.

கர்தினால் ஜோசப் இராட்சிங்கர் அவர்கள் பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பராகத் தெரிவு

செய்யப்பட்ட அந்த
கர்தினால் பேரவை
நிலை இவருடைய
பாக எட்டு வருடங்க
ருக்குப் பதிலாக இவரே
என்று யார்தான் முன்

போலந்து
ஜேர்மன் பாப்ரசரை
பாப்பரசர் ஒருவர் -
பாப்பரசர் - என்று
சூழ்நிலையில் அத்
கருவிகளின் கண்க
விட்டு பெர்கொக்லியோ

'அடுத்து
ஒருவருக்கே வாய்ப்பு'



2005 ஆம் ஆண்டு
தெரிவிலே இரண்டாம்
தாகவிருந்தாலும், குறிப்
ளில் தன்னை வென்றவ
தெரிவுசெய்யப்படக்கூடும்
கூறியிருக்க முடியும்?

பாப்பரசரின் பின்னர்
அடுத்து, இத்தாலிய
ஏன் ஆபிரிக்க நாட்டு
ஆரூடங்கள் உலாவந்த
தனை பேரதும் ராடார்
ளில் மண்ணைத் தூவி
பாப்பிறையாகி விட்டார்.

இலத்தீன் அமெரிக்கர்
என்று வதந்திகளும்

ஊகங்களும் நிலவியபோது இவரைப்பற்றியல்ல இவரது ஆர்ஜன்டினா நாட்டு சகாவான லியோனாடோ சன்ரி *(Leonardo Sandri)* அல்லது சாவோ போலோ *(Sao Paulo)* பேராயர் ஓர்டிலோ ஷெரர் *(Odilo Scherer)* ஆகியோரைப் பற்றியே பேச்சுகள் உலாவந்தன.

இவரை இவரது போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுத்த இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, அவரது இயேசு சபைப் பின்னணி. அடுத்தது, முன்னம் வத்திக்கானை முகஞ்சுழிக்கப்பண்ணிய, ஆர்ஜன்டினாவின் விடுதலை இறையியலில் ஆர்வம் கொண்டுழைத்த அவரது குருக்களுடன் அவருக்கு இருந்த தொடர்பு. 2007 இல் இவர் "நாம் உலகின் மிகவும் சமமற்ற பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அது பெரிதும் வளர்ந்திருந்தாலும், துன்பங்களை சொற்பமாகத்தான் குறைத்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதுமட்டுமல்ல, அவரது வார்த்தைகளில், "நல்லவைகள் நீதியற்ற முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது உருவாக்கியுள்ள சமூகப் பாவச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சூழல் வான் நோக்கிக் கதறுவதுடன், எண்ணற்ற எங்கள் சகோதரர்களின் முற்றுமுழுதான வாழ்வுக்கான சாத்தியங்களை வெகுவாக மட்டுப்படுத்தியுமிருக்கிறது.''

சமூக நீதிக்கான அவரது அர்ப்பணிப்பும், வறுமையை அகற்றுவதற்கான அவரது ஈடுபாடும் அவர் பக்கமாக இப்போது சார்ந்திருக்கிறது. அவரது எளிமை மற்றும் சாதூரியமான சிக்கன வாழ்க்கை முறையும் இதற்குப் பங்களிப்பு நல்கியுள்ளன. ஆர்ஜென்ரினாவின் தலைநகரில் (புவனஸ் அயர்ஸ்) கர்தினால்களுக்கான மாளிகையில் வசிக்க மறுத்து ஒரு சின்ன வீட்டின் பகுதியில் வாழ்ந்ததுடன், சாரதிகளால் ஓட்டப்பட்ட ஆடம்பர வாகனத்தை ஒதுக்கி விட்டு பஸ்ஸில் பயணம் செய்து நின்றவர். அதுமட்டுமல்ல, 2001 ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை உரோமையில் கர்தினாலாகத் திருநிலைப்படுத்திய சடங்கை பார்வையிட வருவதற்கு விமானச் சீட்டுக்காகப் பணத்தை விரயமாக்காது அதனை ஏழை எளியவர் நலன்களுக்காகச் செலவிடுமாறு நூற்றுக்கணக்கான ஆர்ஜ்டினாக்காரர்களிடம் சொல்லி வைத்தவர் இவர்.

பெர்கொக்லியோ 1936ஆம் ஆண்டில் டிசெம்பர் மாதம் 17 ஆம் நாள் ஆர்ஜன்டினாவின் தலைநகர் புவனர்ஸ் அயர்சில் பிறந்தார். ரெயில்வே தொழிலாளியான இத்தாலிய தந்தைக்கும் அவரது மனைவிக்கும் கிடைத்த ஐந்து பிள்ளைகளில் ஒருவராக இவர் இருந்தார். தனது சுவாச சம்பந்தமான நோயினால் ஒரு சுவாசப்பையை இழந்து, தனது இரசாயனவியல் படிப்பைத் துறந்து சுமார் பத்து வருடங்களின் பின்னர். அதாவது தனது 32 வது வயதில் இயேசு சபையில்





தம்மை இணைத்துக் கொண்டார். மிகவும் தாமதமாக இயேசு சபை வாழ்வை ஆரம்பித்திருந்தாலும் கூட மிகவும் குறுகிய நான்காண்டு காலத்துக்கருள்ளேயே உள்ளூர் இயேசு சபை சமூகத்தை 1973 முதல் 1979 வரை, அதாவது, புவனஸ் அயர்சுக்கான பேராயராக திருநிலைப்படுத்தப்படும்வரையிலும் வழிநடத்தும் உயர் பதவியில் இவர் இருந்தார் என்றால் இவரது திறமையை ஊகித்துக்கொள்ளலாம்.

கத்தோலிக்க திருச்சபையை தலைகுனியப் பண்ணிய தனது ஒரு சில கர்தினால் சகாக்களின் விடயம் போன்று இவர் எந்த வகையிலும் தன் நற்பெயருக்கும் திருச்சபைக்கும் களங்கம் ஏற்படுத்தும்படியாக நடந்து கொண்டதில்லை. அத்தோடு, திருச்சபையை ஆளும் 'கியூறியா' எனப்படும் அமைப்பை மாற்றியமைப்பதை முதன்மைச் செயற்பாடாகக் கொள்ளவேண்டும் என்று சிந்திக்கின்ற ஒருவராகவும் கருதப்பட்டவர். 2010ஆம் ஆண்டு ஆர்ஜன்ரினா அரசு ஓரினத் திருமணத்தை சட்டபூர்வமாக்க முடிவெடுத்த போது, ''குழந்தைகள் ஒரு தாயாலும், ஒரு தந்தையாலும் வளர்க்கப்படும், கல்வியூட்டப்படும் உரிமையைக் கொண்டவர்கள்'' என்பதை வலியுறுத்திக்கூறி அரசின் முடிவை வன்மையாக எதிர்த்தார்.

இருந்தும் இவர் ''நோய்கள் பரவாமல் தடுக்கும் வழி'' என்ற கருத்தில் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் விடயத்தில் சற்றுத் தளர்வான கொள்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



> "சமூக நீதிக்கான அவரது அர்ப்பணிப்பும், வறுமையை அகற்றுவதற்கான அவரது ஈடுபாடும் அவர் பக்கமாக இப்போது சார்ந்திருக்கிறது. அவரது எளிமை, மற்றும் சாதாரியமான சிக்கன வாழ்க்கை முறையும் இதற்கு பங்களிப்பு நல்கியுள்ளன".

வெளிக்காட்டவும் செய்தார். சமயங்களுக்கிடையில் உரையாடலில் நம்பிக்கை கொண்டவர். திருச்சபைகளின் ஒற்றுமையை நாடுபவர். திருச்சபையின் கொள்கைகளைப் பொறுத்த வரையில் பழமைவாதியாகக் கருதப்பட்டாலும் பாலியல் தொடர்பான கொள்கைகளில் தளர்வுப் போக்கைக் கொண்டவர் என்று கருதப்படுவதும் உண்டு.

2009ஆம் ஆண்டு, தற்போதைய ஆர்ஜன்ரினா ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டெஸ் *(Christina Fernandez)* சின் கணவரான நெஸ்டோர் கேர்ச்னரின் *(Nestor Kirchner)* அரசை கடுமையாக விமர்சித்த போது பத்திரிகைகள், ஊடகங்களில் தலையங்கங்களைத் தொட்டு நின்றார். சமூகத்தில் சமத்துவமின்மையை வளரவிட்டதில் "நேர்மையற்ற, கபடமான மற்றும் அநீதியான அரசு" என்று சாடி நின்றார் அவர்!

"அதைத் தடுப்பதிலும் பார்க்க, சமத்துவமின்மையை மேலும் அதிகரிக்கப்பண்ணுவதையே அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள் என்று தெரிகின்றது" என்ற அவர் அப்போது, "மனித உரிமை என்பது, பயங்கரவாதத்தினாலோ, அடக்குமுறையினாலோ அல்லது கொலை செய்வதினாலோ மட்டும் மீறப்படுவதன்று, அவற்றுக்கப்பால், மிகப்பெரிய சமத்துவமின்மையை உருவாக்கும் பொருளாதாரக் கட்டமைப்புக்களாலேயும் மீறப்படுகின்றது."

முழு உலகம் தொடர்பாக குறைந்தளவே அறியப்பட்டவராக இருப்பினும், தனிப்பட்ட விமர்சனங்களுக்கும், விவாதங்களுக்கும் உட்படுத்தப்பட்ட ஒருவராக இருக்கவே செய்தார். எட்டு வருடங்களுக்கு முன்னர், முப்பதாயிரம் இடது சாரிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களைக் கடத்தியும் கொன்றும் தீர்த்த ஆர்ஜென்ரினாவின் கோர யுத்தத்தின் ஆவி மீண்டெழுந்து 1976 ஆம் ஆண்டில் இரண்டு சீர்திருத்தவாதிகளான இயேசு சபைக் குருக்களைக் கடத்திய விடயத்தில் சம்பந்தப்பட்டவர் என்ற குற்றச்சாட்டுக்கு அவரை உள்ளாக்கி வதைக்கச் செய்தது.

2005இல் ஆர்ஜென்ரினாவின் பத்திரிகையாளர் ஹொராசியோ வெர்பிட்ஸ்கி அவர்களால் எழுதப்பட்ட 'மௌனம்' என்ற அர்த்தம் கொண்ட 'எல் சைலன்சியோ' *(El Silencio)* என்ற புத்தகத்தில், 'சேரிப்புறங்களைப் போய்த் தரிசிக்க வேண்டாம்' என்ற அவரது உத்தரவை ஏற்காத காரணத்தினால் தமது சபைப் பாதுகாவலை விலக்கிக் கொண்டதாலேயே அவ்விரு இயேசு சபைக் குருக்களும் கடத்தப்பட்டனர் என்று குறிப்பிட்டிருந்தார். அவரது இந்த நூலானது, அந்த இரு குருக்களுடன் கடத்தப்பட்ட இன்னுமொரு இயேசு சபையினரான ஓர்லாண்டோ யோரியோ *(Orlando Yorio)* அவர்கள் இயற்கைக் காரணங்களால் 2000ஆம் ஆண்டு மரணிக்கமுன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் எழுதப்பட்டது. கடத்தப்பட்ட அந்த இரு குருக்களும் ஐந்து மாதங்கள் சிறை வாசத்தை அனுபவித்தவர்கள். அந்நூல் புவனர்ஸ் அயர்சின் சிரேஷ்ட குருக்கள், அரசியற் கைதிகளை மனித உரிமை பரிசோதகர்களின் பார்வையினின்றும் மறைத்து வைத்தவர்கள் என்று கடற்படையினரால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்றும் குறிப்பிடுகின்றது.

- 15ம் பக் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




16

காட்டுத் தீயெனப் பரவிய செய்தியால்
கண்டங்கள் தோறுமே கண்ணீர் சொரிந்ததே
நாட்டினது தலைவர்பலர் ஓடிவந்தார் கல்கத்தா
நாவரண்டு அழுதிருந்தார் அன்னையின் சகோதரிகள்
கண்ட இடங்களெல்லாம் கடுந்துயர சோகமாகி
கண்ணீர்க் கடலாக கல்கத்தா மாறியதால்
வெண்மையுளம் படைத்த அன்னை தெரசாவும்
நீண்ட பயணஞ்சென் றாரே அம்மானை.

ஆயிரமாயிரம் அன்பர்கள் கூடியே
அன்னைக்கு அஞ்சலி செலுத்தியே நின்றனரே
கோபுரங்கள் தோறும் வெண்கொடி பறந்திட
ஆரவாரமற்றதாய் இருந்ததே கல்கத்தா
ஆவிபறந்த காயம் அமைதியாய் உறங்கிட
கூவி அழுதனரே கூடவே இருந்தோர்கள்.
தூவிய மலர்களால் அஞ்சலி செய்தனர்
காவிய காலனை என்செய்வோம் அம்மானை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஏழு
அந்தச் செப்டம்பர் பதின்மூன்றாம் நாளில்
அன்பின் அரசியான அன்னை தெரசாவும்
அடக்கமது ஆகினார் அறிவீரோ அம்மானை
என்னவென்று சொல்லியழ ஏதென்று சொல்லியழ
என்றே மனங்கலங்கி இருந்தனரே சோதரிகள்
தன்னந் தனியான கலங்கரை விளக்கதுவும்
தரணியில் சாய்ந்ததே கூறினேன் அம்மானை.

சிலுவையில் தொங்கிடும் இயேசுவின் ஆன்மீக
தாகமதைத் தீர்த்திட அன்னையும் மனம் கொண்டே
அனைத்துப் பணிகளையும் முடித்தபின் சென்றாரே
அவனியில் புனிதையாய் ஏற்போமே அம்மானை
அன்பின் அரசியாக கிரீடமதைச் சூட்டினேன்
இன்னல்கள் தோய்ந்திட்ட உள்ளங்கள் வாழ்ந்திட
எம்மால் ஆனபணி இயேசுவுக்காய் செய்துநாம்
அன்னை தெரசாவின் அடிச்சுவடு செல்வோமே!

என் தந்தை பொன்னையா யோசப் அழகையா
தாயாரின் நாமமது தெரசா பூரணம்மா
என்றதோர் காரணத்தால் எனக்குள் பிரயமாகி
அன்னை தெரசாவுக்கு அம்மானை தந்தேனே
சொன்ன விசயங்களில் சொட்டுத்தான் பிழையிருப்பின்
என்னை மன்னித்தே ஏற்பீரே அம்மானை
என்னைக் கண்டுகொண்ட தொண்டன் ஏடதற்கு
சொன்னேன் நன்றிபல அறிவீரோ அம்மானை.

-முற்றிற்று-




# அன்பின் அரசி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 13ம் பக் தொடர்...

பேர்கொக்லியோ அனைத்துக் குற்றச் சாட்டுகளையும் மறுத்துரைத்ததுடன், சர்வாதிகார ஆட்சிக் காலத்தில் பல பேருக்கு உதவி செய்ததை எடுத்துக்காட்டினார். இருந்தும் ஒரு சிலர் அன்றைய குற்றச் செயல்களின் விளைவால் இன்னும் ஒப்புரவாக முடியாமல் இருந்த காரணத்தினால் இதை ஏற்கவில்லை. இதனால் புவனர்ஸ் அயர்சின் பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, 'சரித்திரம் அவரைக் குற்றஞ் சாட்டுகின்றது. அன்றைய இராணுவ ஆட்சியாளர்களுடன் நெருங்கியிருந்தார் என்பதையும், திருச்சபையில் எந்த உயர்வு தொடர்பாகவும் எதிர்க்கப்பட்டவராக இருப்பதையும் காட்டுகின்றது' என்று குறிப்பிடுகின்றார்.

சென்ற வருடம் ஆர்ஜென்ரினாவின் ஆயர்கள் அனைவரும், சர்வாதிகார ஆட்சியின்போது பொருத்தமான முறையில் மக்களைப் போதுமான அளவு பாதுகாக்க திருச்சபை தவறிவிட்டது என்று பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்கள். எவ்வாறாயினும் அவரைத் தெரிந்தவர்கள், அவர் ஒரு நிதானமும், அக்கறையும் கொண்ட மனிதர் என்றும் இன்றைய திருச்சபையின் குழப்பமான சூழலில் வேண்டிய அமைதிக்குரிய — சமநிலைக்குரிய - மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய ஒரே பாப்பரசர் இவராகத்தான் இருக்க முடியும் என்றும் அடித்துக் கூறுகிறார்கள்.



"அவரது பண்பைப் பொறுத்தவரையில் எப்போதும் அவர் முற்போக்கானவர், அத்துடன் வேண்டப்படும் புதுப்பித்தல்களைக் கொண்டு வரும் விடயத்தில் ஆழந்தெரியாமல் காலை விடாது செயற்படக்கூடிய ஒருத்தர்" என்று அவரது சுய சரிதை எழுத்தாளரான பிரான்செஸ்கோ அம்ரோகெட்டி அவர்கள் குறிப்பிடுகின்றார்". அவர் ஒரு சமநிலைப்படுத்தும் சக்தியாக இருப்பார். திருச்சபையானது மறைபரப்புத் திருச்சபையாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையுடையவர், திருச்சபை மக்களைச் சென்று சந்திக்க வேண்டும்..., நம்பிக்கையை மேம்படுத்துவதிலும் வளரப்பண்ணுவதிலும் ஒழுங்காகச் செயற்படா நிலையிலிருந்து செயற்படும் தன்மை கொண்டதாக மாறி அமைய வேண்டும் என்ற சிந்தனைகள் கொண்டவர்' என்று குறிப்பிடுகின்றார்.

**- ஆனந்தா -**

# துணுக்குகள்

- *மாணவர்கள், வல்லுனர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் என பலருக்கும் உதவும் நோக்கத்தில், டிஜிட்டலில் வடிவமைக்கப்பட்டுள்ள பழங்கால 256 ஆவணங்கள் இணையதளத்தில் கிடைப்பதற்கு வழிசெய்யப்பட்டுள்ளதாக வத்திக்கான் நூலகத் தலைவர் பேரருட்திரு செசரே பாசினி அறிவித்துள்ளார்.*

- *உலகம் முழுவதும் 547 தொழுநோயாளர் மையங்கள் வழியாக, திருஅவை தொழுநோயாளர்களிடையே சேவையாற்றி வருவதாக இந்த ஆண்டுக்கான திரு அவையின் கையேடு தெரிவிக்கிறது. ஆசியாக் கண்டத்தில்தான் அதிக எண்ணிக்கையில், அதாவது 285 தொழுநோயாளர் மையங்களை திரு அவை நடத்திவருகிறது எனக் கூறும் இப்புள்ளிவிவரக் கையேடு, இவற்றில் 220 மையங்கள் இந்தியாவில் உள்ளதாகவும் தெரிவிக்கிறது.*

- *மெக்சிகோவில் உள்ள குவாதலூப்பே அன்னை மரியா பசிலிக்கா வளாகத்தில் ஆயுதங்களை காவல்துறையிடம் ஒப்படைத்த நிகழ்ச்சி கடந்த வாரம் நிகழ்ந்தது. இதற்கு உதவி செய்த மெக்சிகோ நகர் உயர் மறை மாநிலத்துக்கு ஆளுனர் மிகுவெல் ஏஞ்சல் மான்செரா நன்றி தெரிவித்துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தொண்டனின் சில நிமிடங்கள்...

ஆதிரயோன்

**இ**ம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' நாம் சந்தித்தது, திரு. இரத்தினசிங்கம் ரவிக்குமார் அவர்களை. பிரபலமான விஞ்ஞான ஆசிரியரும் பட்டதாரியுமான ரவிக்குமார் அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முதன்மையாசிரியராகவும் தொழிற்படுகின்றார். இவரின் தமையனார் அமரர் இ. இரத்தினகுமார் அவர்கள் 'துடைப்பம்' என்னும் கையெழுத்து சஞ்சிகையொன்றை எண்பதுகளில் வெளியிட்டுவந்தார். (இதைப்பற்றி இலக்கிய மஞ்சரியிலும் நாம் முன்னர் குறிப்பிட்டுள்ளோம்) அதற்கான ஓவியங்களை ரவிக்குமார் அவர்களே வரைந்துவந்தார்கள். 'துடைப்பத்தைப் பற்றி கொழும்பு 'கத்தலிக் மெசஞ்சர்' சஞ்சிகை விசேச கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. அதில் இவரது ஓவியங்கள் பற்றியும் குறிப்பிட்டு பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பு**கைப்படத் துறையில் உங்கள் ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது? என்று ரவியிடம் கேட்டோம். அதற்கு சற்று ஆழமாக யோசித்துவிட்டு பதில் சொன்னார். (அவரது சிந்தனையில் வட்டம் வட்டமாக 'பிளாஷ்பெக்' வந்ததோ தெரியவில்லை)

என்னுடைய அப்பா ஒரு பாடசாலை அதிபர். அவர் ஒரு கமரா வைத்து இருந்தார். நிறைய கறுப்பு-வெள்ளைப் புகைப்படங்களை எடுப்பார். அதனைப் பார்த்து எனக்கும் ஆர்வம் ஏற்பட்டது. இதனைத் தவிர எனது அத்தான் முறையான ஒருவரும் உயர் உத்தியோகம் பார்த்து வந்தாலும், புகைப்படத்துறையில் ஈடுபாடு கொண்டவர். அவரது கமராவை வைத்துப் படங்கள் எடுக்கத் தொடங்கினேன். இப்படியே ஆர்வம் அதிகரிக்கத் தொடங்கியது. இதைத் தவிர "பாலுமகேந்திரா" அவர்கள் என்னை மிகவும் ஈர்த்தவர். அவரது படங்களைப் பார்த்து, நான் "ஏகலைவன்" ஆனேன். பின்னர் வண்ணப் புகைப் படங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றை இப்போது உள்ளதுபோல் இங்கு கழுவ இயலாது. சிங்கப்பூர் அனுப்பித்தான் கழுவ வேண்டி யிருந்தது. இவ்வாரம்ப முயற்சிகள் அனைத்தும் 1982-1985 களில் இடம்பெற்றன. பின்னர்தான் கொழும்பில் "மில்லர்ஸ்" நிறுவனம் உட்பட சில நிறுவனங்கள் வண்ணப்படங்களை கழுவ ஆரம்பித்தன. தற்போது நம்மூர்வரை ஆய்வு கூடங்கள் வந்துவிட்டன.

தற்போது, 'எண்ம' (டிஜிட்டல்) புகைப் படக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மிகக் குறைந்தளவு 'ஒளிப்படல' (பிலிம்) புகைப்படக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இப்படங்க ளின் தர வித்தியாசம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று ரவி அவர்களிடம் கேட்டோம்.

என்னைப் பொறுத்தவரையில் 'டிஜிட்டலை' விட 'பிலிம்' பாவித்து எடுக்கப்படும் படங்களே தரம் வாய்ந்தவை. எனினும் செலவு கூட; பிலிம் செலவு, கழுவும் செலவு என்பன உண்டு. 'டிஜிற்றல்' முறையில் செலவு குறைவு. 'பிலிம்' போட்டு படம் எடுக்கும்போது, ஓர் எத்தனத்திலேயே சரியான படம் வந்துவிடும். 'டிஜிற்றல்' முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எடுக்கும்போதே கண்ணிமை அசைவுகள் கூட பதிவாகிவிடும். எனவே, படம் ஒன்றை, இரண்டு மூன்று தடவைகள் எடுக்கவேண்டி வரும். நான் அறிந்தவரையில் சிங்களப் பிரதேசங்களில் தொழில் முறை புகைப்படப்பிடிப்பாளர்கள் அனேகம்பேர், இன்னமும் "பிலிம்" பாவிக்கும் முறையையே பயன்படுத்துகின்றார்கள்.

*Glossy, Mat* என இரு வகை கடதாசிக ளில் படங்கள் பதிக்கப்படுகின்றன. இதில் எக்கடதாசி தரம் வாய்ந்தது என கருதுகின்றீர்கள்? என்று கேட்டோம்.

*Glossy* கடதாசியில் வரும்படம் பளபளப்பா னதாக இருக்கும். ஆனால் பாவனைக் காலம் குறைவு. *mat* கடதாசி பளபளப்புக் குறைவு. இயற்கையான பிரதிபலிப்பையும் நீண்டகாலப் பாவனையையும் கொண்டது. வடக்கு கிழக்கு மக்கள் பெரும்பாலும் *Glossy*யைப் பாவிக்கும் அதேவேளை ஏனைய பகுதி மக்கள் *Mat* கடதாசியையே விரும்புகின்றனர். இதற்கிடையில் 'மெட்டலிக்' என்னும் கடதாசியும் அறிமுகமாகி யுள்ளது. பொன்னிறம், வெள்ளி நிறம் என்பன வற்றை அப்படியே இயற்கையாக எடுத்துக் காட்டும். விலை சற்றுக் கூடியது.

**"எதையும் மனச்சாட்சியின்படி விடாமுயற்சியுடன் செய்யுங்கள் முன்னேறலாம்"**

"புகைப்பட அல்பங்கள்' பற்றிக் குறிப்பிட முடியுமா....? என்று ரவிக்குமார் அவர்களிடம் கேட்டோம்.

தலையாட்டியபடி பதில் சொன்னார். மங்களகரமான நிகழ்வுகளையே அல்பமாக அமைத்துக் கொடுக்கின்றோம். எம்போஸ்ட் அல்பம், ஹரிஸ்மா அல்பம். இது 'ஸ்டோரி புக்' அல்பம் என்றும் சொல்லப்படும். இது தவிர 'சிந்தட்டிக் அல்பம்' எனப்படும் அல்பமும் உண்டு. நமது பிரதேசங்களில் ஹரிஸ்மா அல்பம் பிரசித்தமா னது. அதை நாமே தயாரிக்கின்றோம். சிந்தட்டிக் அல்பம் இந்தியாவில்தான் தயாரிக்க முடியும். அத்தொழில்நுட்பம் இன்னும் இலங்கையில் இல்லை. ஹரிஸ்மா அல்பமொன்றின் நிறையின் மூன்றிலொரு பகுதியே சிந்தட்டிக் அல்பத்தின் நிறையாகும். அது 'எக்ஸ்றே பிலிம்' போன்றது. ஆனால் இரண்டு பக்கங்களிலும் படம் தெளிவாகத் தெரியும்படி பதிக்கப்படும்.

புகைப்படக் கருவிகளை எவ்வாறு பெற்றுக் கொள்ள ஆரம்பித்தீர்கள்....? என்று கேட்ட கேள்விக்கு பின்வருமாறு பதில் இறுத்தார்.

குறிப்பாக, இந்திய அமைதிகாக்கும் படையி னர் இலங்கையில் இருந்தபோது, குறைந்த விலை யில் பெற்றுக்கொள்ளும் கமராக்களை அவர்களி டம் சற்று இலாபம் வைத்து விற்பேன். பின்னர் இன்னும் தரங்கூடிய கமராவைப் பெறக்கூடியதாய் இருக்கும். அதனையும் விற்பேன்: இன்னொரு தரங்கூடிய கமராவை வாங்குவேன். இப்படியே தரமானவற்றைப் பெறத் தொடங்கினேன்.

"புகைப்படத்துறையில் விசேட பயிற்சிக ளைப் பெற்றுள்ளீர்களா...?" என நாம் கேட்டோம்.

சில குறும்பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளேன. அவை அதிகம் பிரயோசனமாக இருந்தன. தென்னிலங்கையில் காணப்படும் பயிற்சி நெறிகள் போல எம் பகுதிகளில் வசதிகள் இல்லை. இதுபற்றி, பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும்படி எல்லாம் என் சுய அனுபவம்தான்.

"நீங்கள் புகைப்படத்துறையில் மிகவும் குறைந்த இலாபத்தையே பெற்று மற்றையவர்க ளுக்கு இடைஞ்சலாக இருப்பதாகக் குற்றச்சாட் டொன்று நிலவுகின்றதே... அதுபற்றி...." என்றோம்.

இலாபமும் வேண்டும், வாடிக்கையாளர்க ளின் மனமும் புண்படக்கூடாது. எனவே, குறிப் பிட்ட அளவு இலாபம் போதுமென்று நினைக் கின்றேன்.

- மறு பக். ... -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**- 02ம் பக். தொடர் .....**

நாமும் உயிர்த்தெழுவோம் என்பதற்கு உத்தரவாதம் கிறிஸ்துவின் உயிர்ப்பே! "அவரே இறந்தோருள் முதலில் உயிர்பெற்றெழுந்தவர்" (தி.வெ 1:4). அவரே முதற்கனி. அவரே புதிய படைப்பு. அவரே புதிய மனிதன். புதிய ஆதாம் அவரே!



புதிய மனிதனிலே பொய்மைக்கு இடமில்லை. இருள் அவரை மேற்கொள்ளாது. சாவு அவரை ஆட்கொள்ளாது. அது ஒரு புது வாழ்வு. அனைத்தையும் புதியது ஆக்க வல்லவரும், புது வாழ்வுக்கு அழைப்பவருமான கிறிஸ்து இயேசுவில் எமது நம்பிக்கையை ஆழப்படுத்தி உயிர்த்த வாழ்வை வாழப் பயில்வோம்.

"நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்" (கொலோ 3:1) என அழைக்கும் பவுலோடு இணைந்து, தருவதில் பெறுவோம், மன்னிப்பதில் மன்னிப்பைப் பெறுவோம், இறப்பதில் வாழ்வு பெறுவோம், அப்போதுதான் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போகாமல், குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழக்காமல், துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படாமல், வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போகாமல் இருக்க முடியும். நம்பிக்கையின் ஆண்டைத் தொடக்கி வைத்த திருத்தந்தை கூறியது போன்று, "உயிர் வாழும்போதே உயிர்த்த கிறிஸ்துவின் உயிர் வாழும் அடையாளங்களாக வாழ முயல்வோம்". ■




**வ**ரும் ஜூலை மாதம் பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெறவிருக்கும் உலக இளையோர் நாள் நிகழ்ச்சிகளில் பயன்படுத்தவிருக்கும் செபமாலைகள், திரு உருவங்கள் பதித்த அணிகலன்கள் போன்ற பல்வேறு புனிதப் பொருட்களை பிரேசில் சிறையில் உள்ள 50 ஆண் மற்றும் 30 பெண் கைதிகள் தயாரித்து வருகின்றனர்.

**தொண்டனின் ... - தொடர் -**

இதனால் சில புகைப்படப்பிடிப்பாளர்கள் என்னிடம் மனஸ்தாபப்பட்டதுமுண்டுதான்.

"உங்களின் முன்னேற்றத்தின் பங்காளிகள் யார்...?" என வினவினோம்.

"எனது பெற்றோர், நண்பர்கள் குறிப்பாக, எனது மனைவி, பிள்ளைகள் போன்றோர்தான்" என்று கூறியவாறு மனைவியின் முகத்தைப் பாசத்துடன் பார்க்கின்றார்.

'தொண்டன்' வாசகர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன...?

"எதையும் மனச்சாட்சிப்படி, விடாமுயற்சியுடன் செய்யுங்கள் முன்னேறலாம்...."

திரு. ரவிக்குமார் அவர்களை வாழ்த்தி, நன்றி கூறி விடை பெற்றோம்.

ரவிக்குமார் அவர்கள் எடுத்த சில பிரபல்யமான புகைப்படங்களைப் பார்த்து பிரமித்துப் போனோம். அவர் உள்ளூர்ப் பத்திரிகையொன்றின் செய்தியாளர் என்பதையும் அறிந்து ஆச்சரியப்பட்டோம். எத்தனை முகங்கள் அவருக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




-நில்மினி கஜேந்திரன்-

## கீழைத்தேய நாடான கொரியாவில் திருச்சபை வளர்ச்சி

கொரிய நாட்டிலே திருச்சபையின் வரலாறு மிகக் குறுகியதொன்றாகும். இரு நூற்றாண்டுகளாய் மேற்கொண்ட பலனளிக்காத முயற்சியின் பின்னரே 1590ல் முதல் முதலாய் ஒரு கிறிஸ்தவரைக் காணமுடிகிறது. ஜப்பானியப் படைகள் கொரியாவை முற்றுகையிட்டபோது அங்கு சென்ற படைத் தளபதிகளில் ஒருவரான கொன்சி யூரினாகா என்பவர், இவர் அங்கு தங்கியிருந்த காலத்தில் யூலியா ஒற்றா எனும் கொரியப் பெண்ணை திருமணம் செய்து ஜப்பானுக்கு அழைத்துச் சென்றார். இவரே ஜப்பானில் திருமுழுக்குப் பெற்று பின்பு முதல் கொரிய கிறிஸ்தவராக கொரியாவிற்குத் திரும்பி வந்தவராவார். கொரியாவில் குடியேறிய ஜப்பானியர்களுக்குப் பணிபுரிய அங்கு சென்ற கிரகோரியஸ் தே செஸ்பீட்ஸ் எனும் இயேசு சபைக் குரு 1593ல் கொன்சியை கொரியாவில் சந்தித்தார். ஆனால், அவர் அங்கு மறைபோதகப் பணிசெய்ய அனுமதிக்கப்படவில்லை. கொரியர்கள் பெரும்பாலும் கொன்பூசியசின் படிப்பினைகளைப் பின்பற்றி வாழ்ந்தனர்.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் கொரியாவின் இராஜதந்திரியான யிக்வாங்-யயோங் என்பவர் பேயிங்கிலிருந்து நாடு திரும்பியபோது மத்தேயு ரிச்சியால் வரையறுக்கப்பட்ட உலகப் படங்களையும், இறையியல் நூல்களையும் தம்முடன் எடுத்துவந்தார். இவர் சீனாவில் இருந்தபோதே திருமுழுக்குப்பெற்று பீற்றர் எனும் பெயரையும் பெற்றிருந்தார். இவர் ரிச்சியின் நூலிலிருந்த பல உண்மைகளை ஏனையோருக்கும் எடுத்து விளக்கினார். இதன்மூலம் விசுவாச விதைகள் கொரியாவில் விதைக்கப்பட்டன. 1784ல் இது பூரணமான மரமாகி ஒளி பெற்றது. 1784ல் லீசன்வ் உன் எனும் குரு கொரியா வந்து மறைபணியில் ஈடுபட்டார். காலப்போக்கிலே கொரியர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. ஆட்சியாளர் இவர்களை அரசியல் புரட்சிக்காரராய்க் கருதினர். இதன்மூலம் பல்வேறு துன்பங்களுக்காளானார்கள். 1846ல் கிம் ரேகோன் எனும் 25 வயது இளைஞன் அன்னிய மதத்தைக் கடைப்பிடித்தமைக்காக சிரச்சேதம் செய்யப்பட்டான். மற்றும் மூதாதையர் வழிபாட்டில் பங்கெடுக்க மறுத்தமைக்காகவும் துன்புறுத்தப்பட்டார்கள். இவ்வாறான பல்வேறு அச்சுறுத்தல்கள் மத்தியிலும் கிறிஸ்தவம் பல்வேறு படிகளில் வளர்ச்சியடைந்துகொண்டே சென்றது.


மத்தேயு ரிச்சியின் இறையியல் நூல்கள் கொரியாவிலே கிறிஸ்தவம் பரவச் சாதகமாய் இருந்தன. இக்கருத்துகளுக்குச் சிலர் விமர்சனங்களைக் கூறினும், பலரினால் இவை ஆதரிக்கப்பட்டன. மூதாதையரின் வழிபாடுகளை சிலைவழிபாடெனக் கிறிஸ்தவம் வெறுத்தாலும், இதில் காணப்பட்ட சமூக அமைப்பு முறைகள், சமய சமத்துவ விழுமியங்கள் போன்றவற்றால் கவரப்பட்டனர். இதனால் அறிஞர்கள் மத்தியில் கிறிஸ்தவத்திற்கிருந்த ஆதரவு பெருகியது.

கொரியரின் மொழி வளர்ச்சிக்கும், கல்வி அறிவு வளர்ச்சிக்கும் திருச்சபை ஆற்றிய பணிகள் அளப்பரியவை. 1790ல் நற்செய்திகளின் சில பகுதிகளும், மறைக் கல்வி நூல்களும், பாடநூல்களும் கொரிய மொழியில் அச்சிடப்பட்டன. ஜேர்ண் றொஸ் எனும் ஸ்கொட்லாந்து பிறெஸ்பின்ரேரியன் மறை பரப்பாளர் 1887ல் திருவிவிலியத்தை கொரிய மொழியில் மொழிபெயர்த்தார். பின்னர் புரட்டஸ்தாந்தர்களின் விவிலிய வாசனை மக்கள் மத்தியில் பரவியது. மெதடிஸ்த சபையினரே கொரியாவில் முதல் மாணாக்கருக்கான உயர்தர பாடசாலையை 1885ல் ஸ்தாபித்தனர்.

- 21ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




வாழ்க்கையில் நாம் வாசிக்கும் சில விடயங்கள், அல்லது கேட்ட, அனுபவித்த சில விடயங்கள் நம் மனதில் ஆழமாகப் பதிந்துவிடுகின்ற சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சிலவற்றை இன்றைய இலக்கிய மஞ்சரியில் பகிர்ந்துகொள்வோம்.

அண்மையில் வாசித்த சிறிய துணுக்கொன்று:

ஒரு பிரமாண்டமான கட்டிடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டது. அக்கட்டிடச் சுவரில் நல்ல வாசகங்கள் இரண்டை எழுதவேண்டிய பொறுப்பு இருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்விருவரும் தம்மிடையே எவ்வித கலந்தாலோசனைகளையும் மேற்கொள்ளவில்லை. அவர்கள் இருவரும் தம் விருப்பப்படி இரண்டு வாசகங்களை சுவரில் 'டிஜிட்டல் ஸ்டிக்கரில்' அடித்து ஒட்டினார்கள்.

முதலாமவர் ஒட்டிய வாசகம் : "உன் மோசமான எதிரியை உன் நண்பனாக்கிக் கொள்!"

இரண்டாமவர் ஒட்டிய வாசகம் : "உன் வாழ்க்கையில் மோசமான எதிரி மது பாவனைதான்"

நாம் மிகவும் சிறிய வயதில் வாசித்த சில விடயங்கள் எம் அறியாமை காரணமாக, எம்மை குழப்பி விட்டிருக்கலாம். அண்மையில் ஆசிரியையொருவர் என்னிடம் பகிர்ந்துகொண்ட விடயமொன்று: "ஓடும் புளியம்பழமும்". இதன் அர்த்தம் எமக்குத் தெரியும். ஆனால் அவருக்குச் சிறு வயதில் ஏற்பட்ட குழப்பம் என்னவென்று தெரியுமா...? "புளியம்பழம் எவ்வாறு ஓடும்....?"

எனக்கும் இவ்வாறான குழப்பம் ஒன்று இருந்தது. இரண்டாம் அல்லது மூன்றாம் வகுப்பு 'தமிழ்மலர்' பாடப்புத்தகமாக இருக்க வேண்டும். 1966ம் ஆண்டில் படித்ததாக நினைப்பு. அப்பாடப் புத்தகத்தில் ஒரு பாடல் "பாலும் சோறும் உண்ணத்தந்து படிக்கச் சொல்லும் அம்மா....." என்று அப்பாடல் தொடங்கி, ".... பள்ளிக்கூடம் விட்டநேரம் பாதி வழிக்கு வந்து துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கிக் கட்டிக் கொஞ்சும் அம்மா...." என்று செல்கின்றது. இதில், "பாதி வழிக்கு வந்து...." என்ற பகுதி என் சிறு வயது அறியாமை காரணமாக "பாதி வழுக்கி வந்து" என்று தான் என் மனதில் பதிந்திருந்தது. "அது ஏன் அம்மா வழுக்கி விழுந்து வழுக்கி விழுந்து வரவேண்டும்?" என்று பெரிய சிந்தனை. இப்போது நினைக்கையில் சிரிப்புச் சிரிப்பாய் வருகின்றது...

அத்துடன் ஐந்தாம் வகுப்பு 'தமிழ் மலரில்' இரண்டு பாடங்கள் அப்படியே மனதில் பதிந்திருந்தன. ஒரு பாடம்: "அந்தப் பாவி யார்?". மற்றைய பாடம்: "இரண்டு கிராமங்களைத் தின்ற ஆடு".

"ஒரு பஸ் வண்டி செல்கின்றது. திடீரென்று இடி மின்னலுடன் பலத்த மழை பெய்கின்றது. இடி விழுகின்ற அபாயம், பஸ்ஸில் இருப்பவர்கள் யாரோ ஒரு பாவி பஸ்ஸில் இருக்கின்றார். எனவே, ஒவ்வொருவராக இறங்கி தூரத்தில் இருக்கிற ஆல மரத்தை தொட்டுவரவேண்டும். பாவி போகின்றபோது அவன் மேல்தான் இடிவிழும். பஸ் பயணிகள் காப்பாற்றப்படுவர் என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஒவ்வொருவராகச் சென்று ஆல மரத்தைத் தொட்டு வருகின்றார்கள். ஒருவன் மட்டும் செல்ல மறுக்கின்றான். அவனைப் பலவந்தமாகத் தள்ளி அனுப்புகின்றார்கள். அவன் பயந்து பயந்து சென்று ஆலமரத்தைத் தொடவும், இடி பஸ்ஸின் மேல் விழுந்து எரியவும் சரியாக இருக்கின்றது. அவன் மட்டுந்தான் தப்புகின்றான். இதுதான் கதைச் சுருக்கம். இப்பாடத்தின் முடிவில் கேட்கப்பட்ட வினா "இக்கதையின்படி, அந்தப் பாவி யார்....?"

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

→

இவ்வினாவிற்கு நான் பதில் எழுதவில்லை. ஆசிரியர் "ஏன் விடை எழுதவில்லை?" என்று கேட்டார். அடிப்பாரோ என்று பயம். "பாவி யார் என்று என்னால் தீர்மானிக்க இயலவில்லை. கடவுள்தான் தீர்மானிக்க வேண்டும்" என்றேன். அவர் என்னை ஆச்சரியமாய்ப் பார்த்துவிட்டு முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு, முதலாம் வினாவிற்கு விடையெழுதாமல் விட்டிருந்த வெற்றிடத்திற்கு சிவப்பால் சரி அடையாளம் இட்டார்.

**அடுத்த கதை:** "இரண்டு கிராமங்களைத் தின்ற ஆடு"

"ஒரு மன்னன் காட்டில் வேட்டையாடச் செல்கின்றான். வழி தடுமாறி விடுகின்றான். தாகம் வேறு. அவனைக் கண்ட இடையன் ஒருவன் தன் ஆட்டில் பால் கறந்து கொடுத்து மன்னனைக் காப்பாற்றுகின்றான். அதற்குப் பிரதியுபகாரமாக மன்னன், அவனுக்கு இரண்டு கிராமங்களைப் பரிசளிப்பதாக உறுதியளித்து, அதனை ஓர் இலையில் எழுதிக் கொடுத்து, அதனுடன் அரண்மனையில் வந்து சந்திக்குமாறு கூறிச் செல்கின்றான். இடையன் இலையினை தலைமாட்டில் வைத்துத் தூங்கும்போது, அதனை ஆடு தின்றுவிடுகின்றது. "ஐயோ எனது இரண்டு கிராமங்களையும் ஆடு தின்றுவிட்டதே!" என்று அவன் புலம்புகின்றான். கதையின்படி பின்னர் பல கிராமங்களை அவன் பரிசாகப் பெற்றுக் கொள்கின்றான்....."

கதையின் தலைப்பைப் பார்த்ததும், சிறு வயதில் எனக்குப் பெரிய ஆச்சரியம். "எப்படி ஆடு கிராமங்களைத் தின்னும்...?". ■

**- மாணவர் பக்கம் .....**

இதன் மூலம் புரட்டஸ்தாந்து மதம் மக்கள் மத்தியில் பரவலானது. பின்னர் பல்கலைக் கழகங்கள், வைத்திய முறைகளையும் அறிமுகம் செய்து, வைத்தியசாலைகளையும் திறந்து மக்களுக்குப் பணிகள் பல ஆற்றினர்.

கொரிய திருச்சபையானது இரு துன்பகரமான நிகழ்வுகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. ஒன்று, 1905-1945 களில் ஏற்பட்ட ஜப்பானிய முற்றுகை. இரண்டு, 1950ல் வடகொரியா, தென்கொரியா என ஏற்பட்ட பிளவுகள். இதன் போது பல மெதடிஸ்த சபையினர் சிறைகளில் அடைக்கப்பட்டனர். கொலைசெய்யப்பட்டனர். 40 பேர் அளவில் சுட்டுக்கொல்லப்பட்டனர். புதிய உடன்படிக்கையை வாசிப்பது ஆராதனை நடாத்துவது நிறுத்தப்பட்டது. இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்குள்ளானது. பின்னர் அமெரிக்காவின் பெருந்தொகையான நன்கொடைகள் மூலம் மீண்டும் புனருத்தாரனம் செய்யப்பட்டது. 1970ல் மெதடிஸ்த சபையில் சீர்திருத்தம் ஏற்பட்டது. 1980ல் செயோல் மத்திமம், கிழக்கு, மேற்கு, சமினாமி எனும் 5 மாவட்டங்களாக சபை பிரிந்தது. இதன் நிமித்தம் பல்வேறு வழிகளில் சமய, கல்வி மறைதூது எனும் முறைகளில் கொரியாவில் திருச்சபை வளர்ச்சியடைந்தது●

சுரண்டலே இலட்சியமாய்ப் போச்சு
சொந்தநலன் பேணுதலர சியலாச்சு
திரண்டபொருள் தேடியுயர் பதவிபுகழ் கிடைக்கையிலே
மனிதவுயிர் மதிப்பிழந்து போச்சு...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மொழியாக்கச் சிறுகதை

ஆங்கில மூலம் : கற்றே சொப்பின்
Kate Chopin
தமிழில் : அ.ச. பாய்வா

இக்கதை, 19ம் நூற்றாண்டில் துணிவுள்ள ஒரு கதையாகக் கருதப்பட்டது. அறஞ்சாராத கதையென இதனை இரண்டு சஞ்சிகைகள் ஏற்க மறுத்தன. இதில் வரும் பெண் பாத்திரத்தை மென்மை வாய்ந்ததாய், சுயாதீனம் குறைந்ததாய், தோல்விகரமான மணவாழ்வைக் கொண்டதாய் மாற்ற விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நிராகரித்த கதாசிரியை 'சொப்பின்' இன்று பரவலாகப் பேசப்படும், ஏற்றுக்கொள்ளப்படும் பெண்விடுதலை பற்றி தொடர்ந்து எழுதியவர்.

---

இதய நோயால் பீடிக்கப்பட்டவள் என தெரிந்திருந்தும் திருமதி. மல்லாட்டுக்கு அவளது கணவன் இறந்ததாய்ச் செய்தி மிக அவதானமாகத் தெரிவிக்கப்பட்டது.

அவளது சகோதரி ஜோசப்பின்தான் இதனை அவளுக்குச் சொன்னாள். உள்ளத்திலிருந்து நொருங்கியபடி வெளிவந்த வார்த்தைகள் அவளது துயரத்தைப் பறைசாற்றின. திருமதி. மல்லாட்டின் கணவனது நண்பன் றிச்சட்டும் அவ்வேளை அங்கு நின்றிருந்தான். இரயில் விபத்தில் கொல்லப்பட்டவர்களின் பட்டிய லில் 'பிறெண்றலி மல்லாட்டின்' பெயரை தலைமைதாங்கி வெளிவந்த பத்திரிகை நிறுவனத்திலும் இவன் நின்றிருந்தான்.

பெண்கள் பலர், இந்தச் செய்தியை அறிந்திருந்த அளவுக்குக்கூட திருமதி. மல்லாட் அறிந்திருக்கவில்லை. அதன் முக்கியத்துவத்தையும் உணரவியலா நிலையில் தானொரு கைவிடப்பட்டவள் என்கிற உணர்வில் சகோதரி ஜோசப்பினின் கரங்களில் புதைந்து கிடந்து சில நிமிடங்கள்வரை அழுதவள் துயரத்திலிருந்து ஓரளவு விடுபட்டவளாய்த் தனது அறைக்குச் செல்கிறாள்.

# ஒரு மணித்தியாலத்தின் கதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## "உள்ளிருந்து கொல்லும் வியாதியால் அவள் மரணமானாள்"

அவளை எவருமே தொந்தரவு செய்யவில்லை. ஆன்மாவின் உறுத்தல் அசதியை ஏற்படுத்த, திறந்திருந்த யன்னலை நோக்கியவாறிருந்த பாரிய கதிரையில் தன்னைத் திணிக்கிறாள்.

தனக்கு முன்பாக விரிந்து கிடந்த அந்தப் பரந்த வெளியில் நின்றிருந்த மரங்களின் உச்சிகள், வசந்தத்தின் தளிர்களாய் உயிர்பெற்று நின்றன. காற்றில் எங்குமே மழையின் வாசம். கீழே தெருவில் அங்காடி வியாபாரி ஒருவன் கூவிக்கொண்டு நிற்கிறான். யாரோ இசைக்கும் தூரத்துப் பாடலொன்றின் சங்கீதம் சன்னமாய் அவள் காதுகளில் ஒலிக்கின்றது. எண்ணிக்கையற்ற ஊர்க்குருவிகள் தாழ்வாரத்தில் கீச்சிடுகின்றன.

> * பலவீனம், பயம், துக்கம், அறியாமை ஆகியவை, மூட நம்பிக்கையின் உற்பத்தி ஸ்தானங்கள்.
>
> — ராபர்ட் பீல்.

தலையைக் கதிரையின் திண்டுப் பகுதியில் பதியும்படி பின்நோக்கிச் சாய்த்தவாறு அசைவற்றிருக்கிறாள். யன்னலூடாக மேற்கில் அங்குமிங்குமாய்த் தோன்றி பின் தொட்டிணையும் நீல மேகத்திட்டுகள் கலையாத கனவுகளுடன் உறங்கும் ஒரு குழந்தைபோலிருந்த அவளிடமிருந்து அப்போதைக்கப்போது வெப்புசாரம் வெளிப்பட்டது.

இளமையான அவளது முகத்திலரும்பிய துன்பத்தின் ரேகைகள், அவளுள் மெல்ல அரும்பும் ஒருவித ஆண்மையையும் வெளிப்படுத்துகின்றன. தூரத்தில் மேகத் திட்டுகளில் பதிந்து நின்ற அவள் பார்வையில் தொக்கிநிற்கின்ற உணர்வுகளை எவரறிவார்...?

தன்னை நோக்கி ஏதோவொன்று வருவது போலவும், அதனையவள் பயத்துடன் எதிர்நோக்குவது போலவும் ஒருவித உணர்வு. பெயரிட முடியாததும், கைக்கொள்ள முடியாதளவுள்ளதுமான மிக நுண்ணியதும், ஒருவித ஒலியோடும், மணத்தோடும், நிறத்தோடும் அண்டவெளியை நிரப்பி நின்றவாறு வெளிப்பட்ட அதனை அவளுணர்வாள்.

மார்புகள் ஒழுங்கீனமாய் ஏறியிறங்க, தன்னை ஆட்கொள்ள நெருங்கி வருமதனை ஒதுக்கிவிடப் போராடுகிறாள். கிட்டத்தட்ட அவளேயவளைக் கைநெகிழ, உதடுகள் பிளந்து எதையோ உச்சரிக்கின்றன. இவ்வாறு எவ்வளவு நேரம் நிகழ்ந்ததோ அவளுக்குத் தெரியாது. பின்னர் அவளுள் குடிகொண்ட வெறுமையும், பயமும் அகல அகல கண்களில் தெளிவும் ஒளியும் பிறக்கின்றன. நாடி நரம்புகள் விரைவாயியங்க, உடலின் ஒவ்வொரு அங்கமும் சூடேறுகின்றன. இந்த உணர்வுகள் பற்றியவள் தன்னுள் கேட்டு வைக்காமலில்லை. பின்னர் அவளுள் ஏற்பட்ட தெளிவு, இவ்வித அற்பமான விடயங்களை நிராகரித்ததில் வியப்பில்லை.

அன்பேயில்லாத கணவனின் இறுகிப்போன முகம், மரணத்தில் பின்னிக் கிடக்குமந்தக் கரங்கள் எனக் காணுமவளால் மீண்டும் அழாமலிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முடியாதென்பதைத் தானறிவாள்.

இந்தக் கசப்பான கணங்களுக் கப்பால், தனக்கேயுரித்தான ஒரு நீண்ட துயரகாலத்தின் தொடர்ச்சி காத்திருப்பதையும் அறிந்த அவள், தன்னிரு கரங்களையும் அகலவிரித்து அவைகளை வரவேற்கிறாள்.

இனி வருங்காலங்களில் அவளுக்காக வாழ எவருமேயில்லை. தங்கள் சக பயணிகளின்மேல் ஆதிக்கஞ் செலுத்தும் உரிமத்தைக் கொண்டவர்க ளாய் நடந்துகொள்ளும் ஒரு குருட்டுச் சமூகத்தில் தனக்கென்று விருப்பு வெறுப்புகள் இனி இருக்கப்போவதில்லை என்பதையவளறிவாள். இதற்குமப்பால் அடுத்தவர் தன்மீது காட்டும் பரிவோ அன்றில் பரிவின்மையோ, அவள்மட்டில் ஒருவித தண்டனைதான்.

இருந்தும், அவனையவள் இன்னும் நேசிக்கிறாள். அப்படியில்லாத சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனாலுமென்ன, காதலென்பதே தன்னுணர்வுகளுக்கு அகப்படாத ஒரு விசித்திரம் என்பது அவளெண்ணம்.

கடந்துபோன தன் வசந்தங்களையும், கோடைகளையும் நோக்கியவள் கற்பனைகள் நீளுகின்றன. வாழ்க்கை நீண்டதாயிருக்கக் கூடாதென்பது அவள் பிரார்த்தனை.

★ மனிதனின் அறிவு உறங்கினால், மிருக இச்சைகள் கண் விழித்து, குதியாட்டம் போடு கின்றன.

— டெர்ரி கோஹென்.

சகோதரியின் இடைவிடாத தொந்தரவு தாளாமல் அறைக் கதவைத் திறக்கிறாள். ஏதோவொருவித தீவிரம் கண்களில் தெரிய, தன்னையுமறியாது ஒரு தேவதைபோல் நடந்து வந்து சகோதரியின்



இடையைத் தழுவியவாறு படியிறங்கி வருகிறாள். அங்கே றிச்சட்டும் அவர்களுக்காய்க் காத்து நிற்கிறான்.

வீட்டின் தாழ்ப்பாள் திறக்கப்பட அங்கு தெரிவதென்ன! அமானுஷ்யமா? இல்லை, களைத்துப்போனவனாய், பிரயாணப்பை குடை சகிதமாய் விபத்தொன்று நடந்ததன் சுவடே தெரியாதவனாய் அவள் கணவன் பிறென்றலி மல்லாட் தான் அங்கு நின்றுகொண்டிருந்தான்.

ஜோசப்பினின் பீறிடும் அழுகையால் ஆடியே போன பிறென்றலி மல்லாட்டின் பார்வையிலி ருந்து அவள் மனைவியை மறைத்துவிட றிச்சட் எடுத்த முயற்சிகள் எதுவுமே வெற்றியளிக்கவில்லை.

ஏறத்தாள அனைத்தும் நடந்து முடிந்திருந்தன. வைத்தியர்கள் வந்து, "உள்ளிருந்து கொல்லும் வியாதியாலவள் மரணமானாள்" எனச் சொல்லிவிட்டுப் போனார்கள்... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நம்பிக்கை ஒரு சவால்...!



அருட்தந்தை. கிளெமெண்ட் V. அன்னதாஸ்

**வி**ன்சன் சர்ச்சில் ஒருமுறை ஒரு பல்கலைக்கழகத்தில் இளைஞர்களுக்கு உரையாற்ற அழைக்கப்பட்டார். ஆனால், இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்பாக அவர் இன்னும் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டதால் களைத்த நிலையில் தாமதமாகவே பல்கலைக்கழகத்தினுள் நுழைந்தார். ஒலி வாங்கிக்கு முன்னால் வந்து நின்றபோது மாணவர்கள் ஆவலோடு அவர் உரைக்கு செவிமடுக்கக் காத்திருந்தனர். ஒரே ஒரு வசனம் பேசினார். பலத்த கைத்தட்டல். அவர் சொன்ன வசனம் என்ன? "Never, Never and Ever give up" இளைஞர்களே, எந்தவேளையிலும் சோர்ந்து போகாதீர்கள்! நம்பிக்கையோடிருங்கள்! என்று உரமூட்டியது இந்த வசனம்.


யுத்தத்தை சந்திக்காத தேசமோ, உளியைச் சந்திக்காத சிற்பமோ, நெருப்பைச் சந்திக்காத தங்கமோ, சவாலைச் சந்திக்காத நம்பிக்கையோ முழுமை பெறுவதில்லை. நம்பிக்கை ஆண்டில் "நம்பிக்கை ஒரு சவால்" என்ற கருப்பொருளில் சில சிந்தனைகளை எழுத முனைகின்றேன். "விசுவாசம் ஒரு போராட்டம்" என்றார் பவுல் திருத்தூதர். விசுவாசம் ஓர் அர்ப்பணம் என்றது இரண்டாம் வத்திக்கான் சங்கம். விசுவாசம் ஒரு சவால் இது நமது அன்றாட அனுபவம். பூப்பறிக்கும் போது முள் குத்தும் எனப் பயப்பட்டால் நாம் பூப்பறிக்க முடியாது. அதுபோன்று இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்து வாழ முற்படும்போது நாம் சந்திக்கும் முட்கள், தடைகள், துன்பங்கள், பிரச்சினைகள், இவற்றை வெல்ல முயல்வதே நமது நம்பிக்கையின் சவாலாகும்.

சில வேளைகளில் சிலுவைகளை நாம் தேர்ந்தெடுக்கின்றோம்; பல வேளைகளில் சிலுவைகள் நம்மைத் தேர்ந்தெடுக்கின்றன. நம்பிக்கைப் பயணம் ஒரு சவால். 'ஆடாத படகில் நாம் பயணம் செய்ய முடியாது' (எபேசியர் 6:16) 'எந்நிலையிலும் நம்பிக்கை எனும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்கிறது வேதவசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நம்பிக்கையைப் பிடித்து இயேசுவின் பாதச் சுவடுகளைப் பின் தொடர்ந்து வாழ்வது ஒரு சவாலான வாழ்வாகும். நமது வாழ்வும் நம்பிக்கையும் ஒன்றோடொன்று தொடர்புடையது. எமது வாழ்வு கடவுளைக் காண்பதற்காக மட்டும் என்ற பசப்பு மொழி பேசுவதல்ல நம்பிக்கை. எங்களுக்கு மட்டுமே இறைவன் தருவார் என்ற இறுமாப்புக் கொள்கையுமல்ல நம்பிக்கை. சவாலையும் முகங்கொடுக்க முனைந்தனர். (எபிரேயர் 11:1) 'நம்பிக்கை என்பது நாம் எதிர் நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை'. இதன் வெளிப்பாடாக அன்று சீடர்கள் இயேசுவுக்காக, இயேசுவின் கொள்கைகளுக்காக வீர மரணமடையவும் தயாரானார்கள். நம்பிக்கையைத் தளர்த்தும் காரணிகளை அவர் மடியும் மலர்களைப் போன்றதல்ல. வாழ்க்கையின் அடி நாதம் நம்பிக்கை, உறவின் உயிர்மூச்சு நம்பிக்கை, சவால்களை வென்று சாதனைகளைப் படைக்குமிடம் நம்பிக்கை. "தங்கத்தை நெருப்பால் புடம் போடுவதைப் போல மனிதனை இறைவன் துன்பத்தால் புடம் போடுகின்றார்". துன்பம் என்ற சவாலை விரட்டியடிக்கும் ஆயுதம் நம்பிக்கை. விசுவாச




மாறாக, எமக்கு உயிர்மூச்சைத் தந்து எமக்கு ஒரு வாழ்வைத் தந்த பரமனின் வழியில் பயணிக்க விளையும் வழியில் சந்திக்கின்ற தடைகளையும் தடைக்கற்களையும் தாண்டி எழும் சவாலே நம்பிக்கை. கடவுளைக் கண்ணால் காணும் அனுபவத்தை மீண்டும் தோண்டிப் பார்த்து சல்லடையில் இதயத்தை வடிகட்டி வாழ்வில் தோன்றுகின்ற சவால்களைச் சந்திப்பதே நம்பிக்கை.

அன்று சிலுவையில் தொங்கிய இயேசுவின் நாடித் துடிப்புகள் சீடர்களின் இதயங்களில் மத்தாப்பாய் மாறி, நம்பிக்கை வாழ்வு நங்கூரமிடப்பட்டு, இயேசுவுக்காக எந்தச் சவால்கள் சந்தித்து தடைதாண்டி இயேசுவுக்கு முற்றுமுழுதாகத் தங்களை அர்ப்பணித்தார்கள்.

மதம் இன்று விற்கப் படும் பொருளாகச் சந்தைக்கு வந்து விட்டதா? இது பேரம் பேசப்படுகின்றதா? என்ற சந்தேகங்களை எழுப்புகின்ற நிகழ்வுகளையும் நாம் சந்திக்கின்றோம். கணினி, இணையத்தள உலகச் சவால்கள், எதுவும் பாவமில்லை என்ற மனப்போக்கு, குடும்பங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வு பற்றி அக்கறை கொள்ளாத தன்மைகள் இப்படியாக எத்தனை எத்தனையோ சவால்கள்.

இறை நம்பிக்கை என்பது ஒரேநாளில் மலர்ந்து அதிர்வுகளை நாம் சந்திக்கும் போது நாம் ஏமாந்து விடாது வீறு கொண்டு எழ எமக்கு உந்துதல் சக்தி தருவது நம்பிக்கை (Money could be a universal passport to go everywhere except Heaven) காசேதான் கடவுளடா என்ற சவால், இருண்ட மாயை நம்மை திசை திருப்பும் போது எமது பயணத் திசையை இறைவன் பக்கம் திருப்பும், வழிகாட்டும் திசையறி கருவி நம்பிக்கை. "இறை ஞானத்தை விரும்பும் ஆன்மா முதலில் சிலுவையில் நுழைதல் வேண்டும்' என்றார் திருச்சிலுவை யோவான். (John of the Cross) முள் இல்லாத ரோஜா இல்லை, துன்பமில்லாத இன்பமில்லை, சிலுவை இல்லாத கிறிஸ்தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல்லை. துன்பம் என்ற சவால் நிறைந்த சோக நிகழ்வுகளில் எம்மைச் சான்று பகர வைப்பது நம்பிக்கை.

இலட்சியத்திலிருந்து மனித கண்கள் விடுபடும் போது, தடைகள் என்ற இடையூறுகள், மனிதனைப் பயமுறுத்தும் போது இயேசுவே எமது இலட்சியம் என்று துணிந்து சொல்ல அவர் பின்னால் செல்ல எம்மைத் தூண்டுவது நம்பிக்கை. (When we do what we can, God will do what we can't) இறை நம்பிக்கையில் அச்சமின்றி நெஞ்சில் வீரத்தோடும், மனதில் நம்பிக்கையோடும் தொடர்ந்து எந்த சவாலுக்கும் நிறைவான முடிவுரை தருவது நமது நம்பிக்கை.

இரவு, பகலாக வெள்ளத்தில் தத்தளித்தார் நோவா. அச்சம் அவரை ஆட்கொள்ளவில்லை. ஒரே மகனை பலியாக்க ஆபிரகாம் அழைக்கப்பட்டபோது அச்சம் அவரை ஆட்கொள்ளவில்லை. "மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்" என்று வான தூதர் சூசைக்குச் சொன்னபோது அச்சம் அவரை ஆட்கொள்ளவில்லை. சிலுவையில் தலை கீழாக அறையப்பட பேதுரு இழுத்துச் செல்லப்பட்டபோது அச்சம் அவரை ஆட் கொள்ளவில்லை. காரணம் சவால்களை வெல்ல அவர்களிடமிருந்த ஒரே துணிவு நம்பிக்கை.

"கடவுள் நம்பிக்கை என்பது விவாதத்துக்குரிய பொருளன்று, அதுதான் உண்மை நியதி" என்றார் மகாத்மா காந்தி. (தி.பாடல் 46:1) "கடவுள் நமக்கு அடைக்கலமும், ஆற்றலுமாய் உள்ளார். இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே" என்கின்றது திருப்பாடல். மலர்கள் விரும்புவது வாசம் வீசிட, நிலா உதிப்பது ஒளியை வீசிட, இதயம் துடிப்பது அன்பைக் காட்டிட, கிறிஸ்தவர் வாழ்வது நம்பிக்கையை பறைசாற்ற.

சவால்களை வெல்வோம்.
நம்பிக்கையில்
வலுப்பெறுவோம்.




## பாப்பரசரைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டிய சில விடயங்கள்

- கர்தினால் ஆக இருந்தபோது, ஒரு சிறிய தொடர் மாடியில் வசித்தவர்
- பஸ்ஸில் பயணிப்பதையே பெரிதும் விரும்புபவர்
- 50 ஆண்டுகளாக ஒற்றைச் சுவாசப்பையுடன் வாழ்பவர். மற்றைய சுவாசப்பை அவர் படிக்கின்ற காலத்தில் தொற்று காரணமாக அகற்றப்பட்டுவிட்டது
- இத்தாலிய இரயில்வே தொழிலாளியின் மகன்
- இரசாயனவியலாளனாகப் பயிற்றப்பட்டவர்
- நவீனகால வரலாற்றில் ஐரோப்பிய நாடுகள் சாராத முதலாவது பாப்பரசர்
- ஓரினச் சேர்க்கையாளர்கள் பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதென்பது குழந்தைகளுக்கெதிரான அநீதி என்பதில் உறுதியான கருத்துக் கொண்டவர், கருத்தடைச் சாதனங்கள் தொற்றுநோய்களைத் தடுக்குமாயின் அவற்றைப் பயன்படுத்தலாம் என்கின்ற முற்போக்குச் சிந்தனை கொண்டவர்
- 2001 ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயாளிகளின் கால்களைக் கழுவி முத்தமிட்டவர்
- சரளமாக இத்தாலி, ஜெர்மன், ஸ்பானிஷ் மொழிகளில் உரையாடக் கூடியவர்
- இது வரைக்கும் கர்தினால்களின் மாளிகையைப் புறக்கணித்துவிட்டு எளிமையாகத் தொடர்மாடி ஒன்றில் வசித்து வருபவர்
- கர்தினாலாக திருநிலைப்படுத்தப்பட்ட வேளையில், அதைக் காண்பதற்கு உரோமைக்கு வீணாகப் பணம் செலுத்தி வராது, அந்தப் பணத்தை ஏழைகள் நலனில் செலவிடுமாறு ஆர்ஜென்ரினா மக்களைக் கேட்டுக் கொண்டவர்
- 2005 ஆம் ஆண்டு திருத்தந்தைக்கான தெரிவின்போது, 16ஆம் ஆசிர்வாதப்பருக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டவர் என நம்பப்படுகின்றவர்
- 'மோட்சமும் உலகமும்' என்ற நூலை ஸ்பானிய மொழியில் இவரும் சேர்ந்தே எழுதியுள்ளார்
- திருச்சபையின் கொள்கைகளில் படிப்பினைகளில் உறுதியானவராய் இருந்தாலும் திருமணமாகாமல் பிறக்கும் குழந்தைகளுக்கு திருமுழுக்கு அளிக்க மறுத்தமைக்கு குருக்களைக் கண்டித்தவர்

- ஏ. ஜீ. இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்க்கைக்கு 5 சாதிப்பாய்...!

**சா**திக்கும் சாதிக்கும் அல்ல
மனிதனுக்கும் மனிதனுக்கும்
பிறக்கும் குழந்தைகளே
சாதிக்கும் சாதிக்கும் .....

போர்ப் படைதனில் தூங்கியவன் வெற்றியிழந்தான்.
உயர் பள்ளிதனில் தூங்கியவன் கல்வியிழந்தான்
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான் - கொண்ட
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான்

எனும் வரிகள் விழிப்பின் அவசியத்தை புரியவைக்கின்றன.

விழித்திருத்தல் என்றால் என்ன...? தூக்கம் அற்ற நிலைதானே!!! அப்படியானால் தூக்கம் என்பது தப்பான காரியமா...?

கிடையாது நண்பா....! ஏனென்றால் தூக்கம் என்பது தூக்கணாங்குருவிக்கூடு. யாரும் கலைக்கலாம்; எவரும் கட்டிவிட முடியாது. மனிதன் கொடுத்து வைத்தவன். ஜீவராசிகளில் மல்லாந்து படுப்பவன் மனிதன் மட்டுந்தான்.

தூங்குவது சுலபமில்லை. காற்று எப்போ தேனும் கண்ணயர்ந்ததுண்டா? கடலுக்கு யார் படுக்கை தயாரிப்பது? சூரியனுக்கு யார் தூக்க மாத்திரை கொடுப்பது? மனிதனால் காசு கொடுக்காமல் வாங்கக்கூடியது கண்ணுறக்கம் மட்டுந்தான்.

நிம்மதி கொடுக்கும் தூக்கத்தை எந்த மனிதனும் இழக்க விரும்புவதில்லை. தூங்காத மனிதனால் உயிர்வாழ முடியாது. காரணம் தூக்கம் என்பது உடலுக்கும் மனதுக்கும் கொடுக்கப்படும் ஓய்வு. ஓய்வில்லாமல் இயங்கும் எந்த மனிதனாலும் அதிக நாட்கள் உயிர்வாழ முடியாது என்பது விஞ்ஞானம்.

தூக்கம் நல்லதுதான். ஆனால், தூங்க வேண்டிய நேரத்தில் விழித்திருப்பதும் விழித்திருக்க வேண்டிய நேரத்தில் தூங்குவதும் தவறு. எவ்வளவுதான் வேகமுடைய ஓட்டக்காரனாக இருந்தாலும் போட்டி நேரத்தில் தூங்கியதால்தான் முயல் ஆமையிடம் தோற்றது.

மத்தேயு 25:5ல் மனுமகன் இரவில் வந்தபோது 5 கன்னியர்கள் அவரைத் தவறவிட்டதற்கும் இதுவே காரணம்.

ஆகவே, நண்பனே! விழித்திருக்கக் கற்றுக்கொள். பூமி உருண்டை என்று கண்டறிந்த கலிலியோ ஒருநாளில் தூங்கியது வெறும் 1 1/2 மணி நேரம்தான். அகில உலகையும் அடக்கியாள நினைத்த மகா அலெக்சாண்டர் ஒரு நாளில் தூங்கியது 1 மணிநேரம்தான். மின்சார விளக்கைக் கண்டு பிடித்த தாமஸ் அல்வா எடிசன் அந்த நாட்களில் தூங்கியது வெறும் 1/2 மணி நேரம்தான்.

நீயும் சாதிக்க வேண்டுமல்லவா...? இப்போதே விழித்துக்கொள்! தூரம் என்று நினைத்தால் பாதம் நடக்காது. பாரம் என்று நினைத்தால் தோள்கள் சுமக்காது. தூங்கியே கிடந்தால் சாதனை உருவாகாது.

நம்பிக்கையுடன் .... Fr. ரமேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## சித்திரை மாதம் – 2013

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 புனித வெனான்சியு புனித ஹூக் | 2 புனித போலாவின் பிரான்சிஸ் | 3 புனித அகப்பி புனித றிச்சர்ட் | 4 புனித இசிதோர் | 5 புனித வின்சன்ட் பெரெர் | 6 புனித செலஸ்ரைன் புனித மார்சலினஸ் |
| 7 இறை இரக்கப் பெருவிழா புனித டிசால் ஜோன் பப்டிஸ்ட் | 8 கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழா புனித டியோனி புனித ஜூலியா பில்லியட் | 9 புனித கவுசெரியஸ் | 10 புனித புள்பேட் | 11 புனித ஸ்ரனிஸ்லாஸ் புனித கெம்மா கல்கனி | 12 புனித ஜூலியஸ் | 13 புனித 1ம் மார்ட்டீன் |
| 14 புனித யுஸ்தினா புனிதர்களான டிபட்டியஸ், வலேரியன், மக்சிமஸ் | 15 புனித அனத்தாசியா புனித பேட்டனஸ் | 16 புனித பேணாட் புனித பெனடிக்ற் ஜோசப் லப்ரே | 17 புனித அனிசேர் புனித ஸ்டீபன் ஹார்டிங் | 18 புனித எலவுந்தோரி புனித அப்பலோனியஸ் | 19 புனித எல்பேகே | 20 புனித சூரியகஸ் புனித மார்சலினஸ் |
| 21 புனித அன்சலம் | 22 புனித செத்தோர் புனிதர்களான எபிபோடியசும், அலெக்சாண்டரும். | 23 புனித ஜோர்ஜ் | 24 புனித சிக்மரிங்கன் பிடெலிஸ் | 25 புனித மாற்கு நற்செய்தியாளர் | 26 புனித அல்டா | 27 புனித தியோப்ளஸ் புனித ஸிட்டா |
| 28 புனித சானல்பியர் புனித பீற்றர் சனல் | 29 புனித சீயன்னா கத்தரின் | 30 புனித 5ம் பயஸ் | | | | |

### குறும்(புப்)பா - 109

உயிரடங்கிப் போனகதை உலகறியும்
உயிர்ப்படையும் வழியதனை யாரறிவார்
துயரடங்கும் தீயோரின் செயலொடுங்கும் செய்வினைகள்
மறையுமுனை மட்டுமே நம்பு.



~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனிதர் வரலாறு



**சித்திரை - 20** **புனித மார்சலினஸ்**

புனித மார்சலினஸ் ஆயர் ஆவார். ஆபிரிக்காவில் வாழ்ந்த ஓர் அரச குடும்பப் பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் வின்சன்ட், டொமினினஸ் ஆகியோருடன் கோல் எனுமிடத்திற்குச் சென்று அல்ப்ஸ் மலையின் சுற்றுப் புறங்களில் நற்செய்தியை மிக வெற்றிகரமாகப் போதித்தார். எம்பிரன் எனுமிடத்தில் செபக்கூட மொன்றையமைத்து வாழ்ந்தார். இரவு முழுவதும் செபத்தில் கழித்தார். நாள் முழுவதும் இறை பணிகளில் ஈடுபட்டார். இவரது முன்மாதிரிகையாலும், மறையுரைகளாலும் இவர் வாழ்ந்த பகுதியிலிருந்த விக்கிரக ஆராதனை செய்வோரில் மிகப் பாரிய அளவினரை மனமாற்றம் பெற வைத்தார். நகர் முழுவதிலும் வாழ்ந்தவர்கள் அனைவருமே மனமாற்றம் பெற்ற வேளையில் வேர்செயில்சைச் சேர்ந்த புனித யூசிபியஸ் இவரது அழைப்புக்கிணங்க அங்கே வந்து செபக்கூடமொன்றை அமைத்தார். மார்சலினஸ் இறையரசைப் பரப்பும் பணிகளில் தம் முழுச் சக்தியுடன் ஈடுபட்டார். தான் செல்லாத பல இடங்களுக்கு வின்சன்டையும், டொமினினசையும் போதிக்க அனுப்பினார். இவரது புதுமை நிறைந்த கஷ்டமான அப்போஸ்தலப் பணிகளை இறைவன் ஏற்றுக்கொண்டார். இவர் ரும்பிரனில் 374ம் வருடம் இறைபதமெய்தினார்.

**சித்திரை - 23** **புனித ஜோர்ஜ்**



இவர் இங்கிலாந்து நாட்டின் பாதுகாவலர். மறைசாட்சியாக மரித்த இப்போர் வீரரின் தியாகம் கி.பி. 5ம் நூற்றாண்டுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மகா கொன்ஸ்டன்டைன் மன்னன் நிர்மாணித்த கொன்ஸ்தாந்துநோபிள் எனுமிடத்தில் திருச்சபையின் பழைய வரலாற்றிலிருந்து இவரைப்பற்றிய அத்தாட்சிகள் கிடைக்கப் பெற்றன என்றாலும் சிறிதளவே இவரைப்பற்றியறிய முடிந்தது. புராதன கால சமய விரோதிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள் மூலம் தெளிவற்ற சில செய்திகள் கிடைத்தன. இவற்றின்படி இவர் 4ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் நிக்கோமீடியா எனுமிடத்தில் தியோக்கிளேசியன் மன்னனால் சித்திரவதைக்குள்ளாகி மறை சாட்சியானார் எனத் தெரிகிறது. கிரேக்க நாட்டு மக்கள் இவரை மாபெரும் மறைசாட்சி எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். அத்துடன் நன்றி மறவாது இவரது பெருவிழாவை விடுமுறை நாளாகவும் ஆக்கினர். இவர் போர்வீரன் என்பதால் போர்க்களத்தில் போராடும் அத்தனை போர்வீரர்களுக்காகவும் இறைவனிடம் மன்றாடுவார். முதலாம் நோர்மன் குல அரசர்களது காலத்தில் இவர் இங்கிலாந்தின் பாதுகாவலராகத் தெரிந்துகொள்ளப்பட்டார். அத்துடன் 3ம் எட்வட் மன்னர் இவரை மரியாதை செய்ய "சேர்" பட்டமளித்துக் கௌரவித்தார். சிலர் நிக்கோ மீடியா எனுமிடத்தில் அரச நீதிகளால் நிகழ்ந்த இவரது கண்ணீர் நிறைந்த முடிவை முதலில் வெளியிட்டனர். 303ம் வருடத்தில் இவர் மறைசாட்சியானார் என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

# விவிலியம் கற்போம் - 120

பரிசுப் போட்டி

முடிவுத் திகதி 30.04.2013

## இணைச்சட்டம் அதிகாரங்கள் 26-27

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே மக்களை நோக்கி "உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டினுள் சென்று குடியேறும் போது, அந்நாட்டின் நிலத்து முதற்பலன் அனைத்தையும் கூடையில் வைத்து, தேர்ந்துகொள்ளும் இடத்திற்குக் கொண்டுபோ, அன்று அங்கு பணிபுரியும் ........................ சென்று 'எங்களுக்குக் கொடுப்பதாக எம் மூதாதையருக்கு அண்டவர் ஆணையிட்டுக்கூறிய நாட்டில் வந்து சேர்ந்துள்ளேன் என ஆண்டவர் முன் அறிக்கையிடுகிறேன்' எனச் சொல். அவர் அதையெடுத்துப் பலிபீடத்தின் முன் வைப்பார். நீ நிரந்தரக் குடியற்ற ........................ என் தந்தை எகிப்து நாட்டுக்கு இறங்கிச் சென்றார். அங்கு அன்னியராய் இருந்தார். ஆனால், அங்கே வலிமை மிகு, திரளான மக்களினத்தைக் கொண்டவரானார். எகிப்தியர் எம்மைக் கொடுமைப்படுத்தினர். நாம் ஆண்டவரை நோக்கி ........................ எழுப்பினோம். அவர் எம் குரலைக் கேட்டார். எகிப்திலிருந்து எமைப் புறப்படச் செய்தார். அவர் எம்மை இந்த இடத்திற்குக் கூட்டிவந்து, பாலும், தேனும் வழிந்தோடும் நாட்டை எமக்குத் தந்தார். எனவே, ஆண்டவரே நிலத்தின் ........................ கொண்டுவந்துள்ளேன்' எனச் சொல்லி, அதை ஆண்டவர் முன் வைத்துப் பணிந்து தொழுவாய். பின் நீயும் லேவியரும், உன்னோடுள்ள அன்னியரும் ஆண்டவர் உனக்கும் உன் வீட்டாருக்கும் செய்த அனைத்து நன்மைகளுக்காக அக்களியுங்கள். ........................ ஒரு பகுதி செலுத்தும் மூன்றாம் ஆண்டில், அவ்வாண்டின் விளைச்சலில் பத்திலொரு பாகத்தை, லேவியருக்கும், அனாதைக்கும், கைம்பெண்ணுக்கும் கொடு. அவர்கள் உன் வாயில்களுக்குள்ளே உண்டு நிறைவடைவர். பின் ஆண்டவர் முன் நீ செய்ததைக் கூறி, உம் ........................ மீறவில்லை, மறக்கவுமில்லை. விண்ணிலிருந்து கண்ணோக்கி எமக்கும் நாட்டுக்கும் ஆசி வழங்குவீராக' எனச் சொல். இன்று நான் கூறும் அனைத்தையும் கடைப்பிடியுங்கள். அந்நாட்டிற்குச் செல்லுமுன் பெரிய கற்களை நாட்டிச் சாந்து பூசி, நாட்டினுள் சென்றதும் ........................ அதில் எழுதி வை. இத்தகைய கற்களை ஏபால் மலைமீது நாட்டி அங்கு கற்களாலான ஒரு பலிப்பீடத்தைக் கட்டுங்கள். அவற்றின்மீது இரும்புக் கருவி படக்கூடாது. அதன்மேல் எரிபலிகளைச் செலுத்துங்கள். உணவருந்தி மகிழுங்கள். நீங்கள் ........................ கடந்ததும் மக்களுக்கு ஆசி வழங்க சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமின் ஆகியோர் கெரிசிம் மலைமீது நிற்கட்டும். மக்களுக்குச் சாபம் வழங்க ரூபன், காத்து, ஆசேர், செபுலோன், தாண், நப்தலி ஆகியோர் ஏபால் மலைமீது நிற்கட்டும். ........................ இஸ்ரயேலர் அனைவருக்கும் உரத்தகுரலில் கூறவேண்டியது: 'ஆண்டவருக்கு அருவருப்பானதும், சிற்பியின் கைவினைப் பொருட்களுமான வார்ப்புச் சிலையையோ செதுக்குச் சிலையையோ செய்து மறைவான இடத்தில் வைப்பவர் சபிக்கப்படட்டும்'' என்பதே. அதற்கு மக்கள் 'அப்படியே ஆகட்டும்' எனப் பதில் கூறுவர். திருச்சட்டத்தின் ........................ எல்லாம் கடைப்பிடிக்காதவர் சபிக்கப்படட்டும் என்று சொல்ல, மக்கள் அனைவரும் "அப்படியே ஆகட்டும்" என்பர்" என்று கூறினார்.

| | |
|---|---|
| **விடைகள்:** | **பத்தில், கட்டளைகளை, திருச்சட்டத்தினை, யோர்தானை, வார்த்தைகளை, லேவியர், முதற்பலனை, குரல், அரமெயரான, குருவிடம்.** |

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 120

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. இந்திய கிரிக்கட் அணியின் தற்போதைய தலைவர்
(கங்குலி - சச்சின் - டோனி)

2. தானாகவே ஒளி வீசுவது
(சந்திரன் - நட்சத்திரம் - புதன்)

3. உலகப்படம் ஒன்றை முதன் முதல் வரைந்தவர்
(ஸ்ராபோ - தொலமி - பிக்காசோ)

4. இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது தமிழ்த் திரைப்படம்
(வாடைக்காற்று - தோட்டக்காரி - நான் உங்கள் தோழன்)

5. 'விரலுக்குத் தக்க ....................'
(மோதிரம் வேணும் - நகம் இருக்கும் - வீக்கம் இருக்கோணும்)

6. அழகு / பழகு } என்னும் சொற்களில் எதுகை என்பது,
(இனிமையாக ஒலிப்பது - சொற்கள் 'கு' என்று முடிவது - இரண்டாம் எழுத்து ஒன்றுபட்டு வருவது.)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 120
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போட்டி முடிவுகள்



## விவிலியம் கற்போம் - 118 விடைகள்

உரியவன், பறவைக்கூட்டையும், திராட்சை, பத்தாம், ஆசியாக, மூன்றாம், அடிமைகளை, அடகாக, கதிரவன், விளைச்சல்.

## அறிவை வளர்ப்போம் - 118 விடைகள்

1. சாமுவேல் ஜான்சன் 2. 45 லீட்டர் 3. 36 இலட்சம் டன் 4. திருத்தந்தை 5. வாய்க்கெட்டவில்லை 6. வன்றொடர் குற்றியலுகரம்

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுவோர்**

- றொசாலியா சருணிதா ஜெயந்திரா
65, திருச்செந்தூர் முருகன் கோவில் வீதி
கல்லடி, மட்டக்களப்பு.

- ஜோன் ஜிதேசன் ஜெயராஜ்
# 65/2, 65, திருச்செந்தூர் முருகன்
கோவில் வீதி, கல்லடி,
மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- அஸ்லினா எல்டன்
இல. 12, முதல்தெரு,
பாரதிபுரம், திருகோணமலை.

- S. அன்டன் றொமேஷ்,
மே/பா, சகாயம்,
கோட்டகொட,
ஸ்பிரிங்வெளி.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 70 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
R. ஜோயல் றபிசன்
174/6, ஜிந்துப்பிட்டி வீதி,
கொழும்பு - 13.

- **இரண்டாம் பரிசு - 300/=**
ஐ. சனோஸ்டிக்கா,
2ம் ஒழுங்கை,
மணல்சேனை, கல்முனை.

- **மூன்றாம் பரிசு - 200/=**
நே. பிறின்சிக்கா,
101/10, 4ம் குறுக்கு,
மாமாங்கம் வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media